விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 29 செவ்வாய்க்கிழமை (13.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 206

## ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்துவதில் இலங்கை அரசு தொடர்ந்து அவதானம்



### உலக சுகாதார ஸ்தாபன பிரதிநிதியிடம் கோவிட் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

(கொழும்பு)
இலங்கையின் ஆரம்ப சுகாதார சேவையினை மேம்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிக கவனம் செலுத்தியுள்ளார் என ஆரம்ப 19

## சாவகச்சேரியில் வீதி விபத்து ஒருவர் காயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று திங்கட் கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். 19

## கோவிட் +1,488

(கொழும்பு)
நாட்டில்மேலும்1,488 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜென 19

# அத்தியாவசிய சேவைகளுக்காக மாகாணங்களுக்கு இடையேயான பஸ், ரயில் சேவைகள் நாளை முதல் ஆரம்பம்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு



(கொழும்பு) நாளை புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அத்தியாவசிய சேவை கடமைகளில் ஈடுபடுவோருக்கு மாகாணங்களுக்கு இடையேயான பஸ் மற்றும் ரயில் சேவைகள் நடத்தப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா 31 பேர் மரணம்

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 31 மரணங்கள் பதிவாகியுள்ளது. 19

## யாழ்.பொலிஸாரிடையே மீண்டும் கொரோனா

### நேற்றும் ஐவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நேற்று 5 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.
சில மாதங்களின் முன்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அதிகள 19

### ராஜபக்ஷவின் குடும்ப நிறுவனமாக இலங்கை

## 80 வீதமான நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில்

### நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியீடு

03ஆம் பக்கம் பார்க்க

## சுகாதார பிரிவே அறிவுறுத்தியது பொலிஸில் தவறேதும் இல்லை

### போராட்டக்காரர்கள் தனிமைப்படுத்தப்பட்டமை தொடர்பில் அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)
சட்டவிரோத போராட்டங்களில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்ட நபர்களை தடுத்து வைத்திருப்பது சுகாதாரத் பிரிவின் அறிவுறுத்த 19

## கணவனின் வாள்வெட்டில் மனைவி படுகாயம்

### கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)
கணவன் துரத்தித் துரத்தி வெட்டியதில் படுகாயமடைந்த மனைவி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.
நேற்று திங்கட் கிழமை பிற்பகல் 2 19

## இலங்கையில் தொடரும் கொரோனா உயிரிழப்புகள்

### 10 நாட்களில் 382 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக் காரணமாக ஏற்பட்டு வரும் உயிரிழப்புகள் தொடர்ந்து வரும் நிலையில் கடந்த 10 நாட்களில் மட்டும் 382 கோவிட்-19 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. 19

## வடக்கில் 26 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற் 19

## ரூ.10 கோடி 30 இலட்சம் பெறுமதியான கஞ்சா மீட்பு



(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிராக கொழும்பில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் சட்டவிரோத கைதுகளை கண்டித்தும் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் அரசாங்கத்திற்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பல தொழிற்சங்கங்கள் ஆதரவு தெரிவித்திருந்தன.

இதன் போது அரசாங்கத்திற்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் எதிர்ப்பு பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியிலும் ஈடுப்பட்டனர்.

இன்றுடன் எமது போராட்டம் முடிவடைந்து விடாது. சட்ட விரோத அடக்குமுறைகள் மற்றும் கைதுகள் உட்பட கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலத்தை கைவிடும் வரை போராட்டம் தொடரும்.

மேலும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் போர்வையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்து சிறையில் அடைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளையும் உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்துவதாக இதன்போது தெரிவித்தனர். (ம-03)


## காணி விற்பனைக்கு

பிரம்படி லேன் 2 ஆம் ஒழுங்கையில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(வெட்டுக் கிணறு)

(7203)

**076 702 3565**


## கண்ணீர் காணிக்கை

யாழ். புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடா Scarborough வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

**திருமதி கமலாம்பிகை சேதுநாதன்**

(ஆசையம்மா)



தோற்றம் : 10.07.1934

மறைவு : 10.07.2021

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும் :

புங்குடுதீவு

பெரியம்மா, குஞ்சியம்மா குடும்பத்தினர்

(7200)

## 32 ஆண்டுகள் கடந்தாலும்

ஒருபோதும் மறவோம்!!!



அமரர் **அ. அமிர்தலிங்கம்**

அமரர் **வெ. யோகேஸ்வரன்**

(C-2342)

மூளாய் தங்க. முகுந்தன்

## மரண அறிவித்தல்

**சின்னையா மணிவண்ணன்**



தோற்றம் : 24.02.1973

மறைவு : 11.07.2021

தம்பலடி பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மணிவண்ணன் நேற்று முன்தினம் (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர் - பிரதேச செயலகம், பருத்தித்துறை) - செல்வமலர் தம்பதிகளின் அன்பு மகனும் கௌரியின் அன்புக் கணவரும் இன்பமலர் (ஆசிரியை - யா/ வல்வை சிவகுரு), மதிவதனி (சுவிஸ்), சிவச்செல்வி (விரிவுரையாளர்- வாழ்க்கை தொழில்சார் தொழில் நுட்பவியல் கல்லூரி, இரத்மலானை) , மயூரன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறிகுமரபரன் (ஆசிரியர் - யா/ கொற்றாவத்தை அ.மி.த.ம பாடசாலை), பகீரதன் (சுவிஸ்), உருத்திரன் (விரிவுரையாளர் - வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி), தாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கிருத்திகா (HNB Head office), செந்தூரன், நவீனன் (சுவிஸ்) மதீனன் (சுவிஸ்), சங்கவி, ஸ்ரீராம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதுவந்தியின் (லண்டன்) அன்புப் பெரியப்பாவும் காலஞ்சென்ற கந்தசாமி, இராசமலர், ரூபசௌந்தரி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற செல்லம், குலேந்திரராசா(சுவிஸ்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.07.2021 புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் பொலிகண்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2341)

பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.

077 406 5556
077 671 7393
071 491 0462

தகவல்:- குடும்பத்தினர்

## எமது அமைச்சருக்கு மயிலிட்டி மக்களின் நன்றி கூறல்



மயிலிட்டி மக்களாகிய நாங்கள் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சொல்லொணா துன்பங்களை அனுபவித்து 2014 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்து அதில் விடுவிக்கப்படாத இடங்களையும் மக்களையும் ஏனையோர் கைவிட்டுவிட்டார்கள். விடுவிக்கப்படாத இடத்து மக்கள் எமது அமைச்சர் கௌரவ **டக்ளஸ் தேவானந்தா** அவர்களை கடவுள் போல நினைத்து அவரை அணுகி எங்கள் துன்பங்களை தெரியப்படுத்தியதன் விளைவாக எங்களுக்கு நல்ல செய்தியை தந்த எமது அமைச்சருக்கு கோடான கோடி நன்றியினைத் தெரிவிப்பதோடு தொடர்ந்தும் நல்ல செய்தியை எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

**மயிலிட்டியில் விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படவேண்டிய காணிகளின் மக்கள் சார்பாக ம.மரியரட்ணம்**

(C-2340)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனாவிலிருந்து குணமடைந்து 14 நாட்களின் பின் தடுப்பூசி பெறலாம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

**கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்த நோயாளர்கள் குணமடைந்து 14 நாட்களின் பின்னர் தடுப்பூசியை பெறுவது உகந்ததாகும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

எனவே, தேவையற்ற முறையில் அச்சமடையத் தேவையில்லை என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நோயாளர் ஒருவர் குண மடைந்து வீடு திரும்பியதன் பின்னர், அன்று முதல் 14 நாட்களுக்குப் பின்னர் தாம திக்காமல் தடுப்பூசியைப் பெற் றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து கர்ப்பிணித் தாய்மாருக்கும் தடுப்பூசி



(கொழும்பு)

18 வயதுக்கு மேற்பட்ட மூன்று மாதங்களைக் கடந்த அனைத்து கர்ப்பிணித் தாய் மாருக்கும் கொவிட்-19 தடுப்பூசி வழங்குமாறு அனைத்து மாகாணங்களையும் சேர்ந்த சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு சுகாதார அமைச்சு ஆலோ சனை வழங்கியுள்ளது. (நி-5)

# உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

உலக சந்தையில் ஒரு அவு ன்ஸ் தங்கத்தின் விலை தற் போது ஆயிரத்து 800 அமெ ரிக்க டொலராக காணப்படும் நிலையில், அது தொடர்ந்தும் அதிகரிக்கும் நிலை ஏற்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு ள்ளது.

அமெரிக்க டொலரின் பெறு மதியில் வீழ்ச்சி மற்றும் டெல்டா கொரோனா வைரஸ் திரிபு தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள உலக பொருளாதார பின்ன டைவு என்பன தங்கத்தின் விலை அதிகரிப்புக்கு காரண மாக அமைந்துள்ளன.

இதற்கமைய, எதிர்வரும் வருடத்தில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் பெறுமதி 2000 அமெரிக்க டொலரை அடை யும் என பொருளாதார வல் லுநர்கள் தெரிவிக்கின்ற னர். (நி-5)

# இலங்கைக்கு இதுவரை 7.1 மில்லியன் தடுப்பூசி




(கொழும்பு)

சீனாவிலிருந்து நேற்று கிடைக்கப்பெற்ற 20 இலட்சம் தடுப்பூசிகளுடன் சேர்த்து இது வரையான காலப்பகுதியில் நாட்டிற்கு மொத்தமாக 7.1 மில்லியன் தடுப்பூசிகள் கிடை க்கப்பெற்றிருப்பதாகவும், இம் மாத இறுதிக்குள் மேலும் 40 இலட்சம் கொவிட் - 19 தடுப்பூ சிகள் நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வும் ஔடத உற்பத்தி, கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல் இரா ஜாங்க அமைச்சர் சன்ன ஜய சுமன தெரிவித்துள்ளார். (நி-5)

# குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றில் இரு ந்து மேலும் ஆயிரத்து 804 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று திங்கட்கிழமை வீடுகளு க்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, கொரோ னாத் தொற்றில் இருந்து பூர ணமாக குணமடைந்தவர் களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 46 ஆயிரத்து 241 ஆக அதிகரித்துள்ளது. இதே வேளை, நாட்டில் கொரோ னாத் தொற்றுக்குள்ளானவர் களின் எண்ணிக்கை 2 இலட் சத்து 74 ஆயிரத்து 538 ஆக அதிகரித்துள்ளதுடன் கொரோ னாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணி க்கை 3 ஆயிரத்து 502 ஆக அதி கரித்துள்ளதாக சுகாதார அமை ச்சு தெரிவித்துள்ளது. (நி-5)

# கின்னஸ் சாதனை படைத்த ஈழத்தமிழ் சிறுவன்



(சென்னை)

தமிழகத்தின் கும்மிடிப்பூ ண்டி இலங்கை தமிழர் அக திகள் முகாமைச் சேர்ந்த இலங்கை மாணவன் ஒரு வர் கின்னஸ் சாதனை படை த்துள்ளார்.

இலங்கை தமிழர் அகதி கள் முகாமில் வசித்து வருகி ன்ற 16 வயதான ரஞ்சன் திவ்வியேஷ் என்ற மாண வனே இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

டிம்பாசனம் மூலம் ஒரு நிமிடத்தில் 34 பலூன்களை உடைத்து இந்த கின்னஸ் சாதனையை நிகழ்த்தியுள்ள தாக 'த ஹிந்து' செய்தி வெளி யிட்டுள்ளது.

உக்ரைனைச்சேர்ந்த இளம் பெண் க்ருடாஸ் ருசியானா டிம்பாசனம் மூலம் பின்புற மாக ஒரு நிமிடத்தில் 24 பலூன்களை உடைத்து நிலை நாட்டியிருந்த கின்னஸ் சாத னையையே இந்த மாண வன் முறியடித்துள்ளார்.

5 வருட யோகா பயிற்சி யின் விளைவாக திவ்வியேஷ் டிம்பாசனம் மூலம் ஒரு நிமி டத்தில் 34 பலூன்களை உடை த்துள்ளார். (நி-5)

# ஓகஸ்டில் பாடசாலைகளை திறக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

தடுப்பூசி செலுத்திய பின் னர் எதிர்வரும் ஓகஸ்ட் மாத த்தில் பாடசாலைகளை மீண் டும் திறப்பதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.



நேற்று திங்கட்கிழமை பாடசாலை ஆசிரியர்கள் மற் றும் கல்விசாரா ஊழியர்க ளுக்கு தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமை ச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் 2இலட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ள னர் என்றும் அவர்களில் பெரு ம்பாலானோருக்கு ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ளது .

இதற்கிடையில், ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் முன்னெடுத்த போராட்டத்தில் இடம்பெற்ற கைது நடவடிக்கை காரணமாக ஒன்லைன் கற் பித்தல் நடவடிக்கைகளில் இரு ந்து விலகியுள்ளனர் என்றும் ஊடகவியலாளர் கேள்வியெ முப்பினார்.

இதற்கு பதிலளித்த அமை ச்சர், சில ஆசிரியர்கள் மட்டுமே நேற்று முதல் கற்பிப்பிலிருந்து விலக நடவடிக்கை எடுத் துள்ளனர். இருப்பினும், ஒன் லைன் கல்வியைத் தொடர வேண்டும் என்றாலும் அது நிரந்தர தீர்வு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)






யாழ்.மாவட்ட சர்வமதப் பேர வையின் ஏற்பாட்டில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு நேற்று யாழ்ப்பாண நகரில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கவனம், அபாயம் மற்றும் அவதானம் எனும் தொனிப் பொருளில் யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையினரால் கொரோனா விழிப்புணர்வு பதாகைகள் யாழ் நகரப்பகுதியில் காட்சிப்படுத் தப்பட்டுள்ளன. குறித்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

(படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலி கனவு பலிச்சிடுச்சு

## கிண்ணம் வென்றதால் மனசு பூரிச்சிடுச்சு

## இங்கிலாந்தின் 55 வருட கனவு தகர்ந்தது

யூரோ கால்பந்து தொடரில் இத்தாலி அணி சம்பியனாகியது. லண்டனில் நடந்த பைனலில் 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான யூரோ கிண்ண கால்பந்து தொடர் நடந்தது.

லண்டன் வெம்ளே மைதானத்தில் நடந்த பைனலில், உலகத் தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் இங்கிலாந்து, தனது சொந்தமண்ணில், 7ஆவது இடத்திலுள்ள இத்தாலியை சந்தித்தது.

போட்டி ஆரம்பித்த ஒரு நிமிடம் 57ஆவது வினாடியில் பின்கள வீரர் டிரிப்பியர் பந்தை இத்தாலி கோல் பகுதியில் அடித்தார். அங்கிருந்த லூக் ஷா அதை அப்படியே கோலாக மாற்றினார்.



வெற்றிக் கிண்ணத்துடன் துள்ளிக் குதிக்கும் இத்தாலிய வீரர்கள்

யூரோ வரலாற்றில் அடிக்கப்பட்ட அதிவேக கோல் என்ற பெருமை இதற்கு கிடைத்தது. முதல் பாதியில் இங்கிலாந்து 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் இங்கிலாந்து கோல் ஏரியாவுக்குள் புகுந்த இத்தாலி வீரர் சியசா அடித்த பந்து கோல் போஸ்டில் பட்டுத் திரும்பியது. உடனடியாக சுதாகரித்த பொனுச்சி (67ஆவது நிமிடம்), மீண்டும் திருப்பி அடித்து வலைக்குள் தள்ள, ஒட்டு மொத்த மைதானமும் 'ஷாக்' ஆனது. முடிவில் போட்டி 1-1 என சமனாக, ஆட்டம் கூடுதல் நேரத்துக்கு சென்றது.

30 நிமிட போராட்டத்துக்குப் பின் இரு அணியினரும் கோல் எதுவும் அடிக்காமல் போக 1-1 என சமனில் நீடித்தது. இதனால் வெற்றியாளரை முடிவு செய்ய 'பெனால்டி ஷூட் அவுட்' முறை பின்பற்றப்பட்டது.

இதில் அசத்திய இத்தாலி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இத்தொடரில் இரண்டாவது முறையாக சம்பியனானது.

கடந்த 1977க்குப் பின் இத்தாலியை இங்கிலாந்து இதுவரை வென்றதில்லை (4 தோல்வி, 'சமன்') என்ற சோகம் தொடர்ந்தது.

**சொந்தமண் சோகம்**

யூரோ. தொடரில் ஸ்பெயின் (1964), இத்தாலி (1968), பிரான்ஸ் (1984) அணிகள் சொந்தமண்ணில் சாதித்து கிண்ணம் வென்றன. இதன் பின் தொடரை நடத்திய அணி கிண்ணம் வென்றது இல்லை.

**53** யூரோ தொடரில் 53 ஆண்டுக்குப் பின் மீண்டும் கிண்ணம் வென்றது இத்தாலி. இதற்கு முன் 1968இல் சொந்தமண்ணில் சாதித்து இருந்தது.

**34** சர்வதேச அரங்கில் இத்தாலி அணி தொடர்ந்து 34 போட்டிகளில் தோற்காமல் (28 வெற்றி, 6 'சமன்') வலம் வருகிறது. கடைசியாக 2018ல் போர்த்துக்கலிடம் வீழ்ந்தது.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

**வெளிவாரிப் பரீட்சைகள்**
**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி [வெளிவாரி]**

● மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2019

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 02.08.2021 (திங்கட்கிழமை) ஆகும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

பிரதிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**குறிப்பு:** நாட்டின் தற்போதைய நிலைமையினை கருத்திற்கொண்டு இப்பரீட்சையானது மாணவர்களுக்கான குறுகியகால அவகாசத்துடன் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை கருத்திற் கொள்க.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**12.07.2021**
(C-2339)


# ஜோகோவிச் ஜோர்

## 20 கிராண்ட்ஸ்லாம் வென்று சாதனை

விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இதன்மூலம் கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 20வது முறையாக கிண்ணம் வென்று சாதனை படைத்தார்.

இங்கிலாந்தின் லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் நடந்தது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு பைனலில் உலகின் 'நம்பர்-1' வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், 9ஆவது இடத்தில் உள்ள இத்தாலியின் மேட்டியோ பெரேட்டினி மோதினர்.

'டை பிரேக்கர்' வரை சென்ற முதல் செட்டை பெரேட்டினி 7-6 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ஜோகோவிச், 2ஆவது செட்டை 6-4 என தன் வசப்படுத்தி பதிலடி கொடுத்தார்.


தொடர்ந்து அசத்திய இவர், அடுத்த இரு செட்களை 6-4, 6-3 என வென்றார்.

**20ஆவது கிராண்ட்ஸ்லாம்**

மூன்று மணி நேரம், 24 நிமிடம் நீடித்த போட்டி யில் அசத்திய ஜோகோவிச் 6-7, 6-4, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, விம்பிள்டனில் 6ஆவது முறையாக கிண்ணம் வென்றார்.

தவிர இது,. இவரது 20வது கிராண்ட்ஸ்லாம் பட்டம். இதுவரை அவுஸ்திரேலிய ஓபனில் 9 (2008, 2011-13, 2015-16, 2019-2021), பிரெஞ்ச் ஓபனில் 2 (2016, 2021), விம்பிள்டனில் 6 (2011, 2014-15, 2018-19, 2021), யு.எஸ்., ஓபனில் 3 (2011, 2015, 2018) முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதன்மூலம் கிராண்ட்ஸ்லாம் ஒற்றையரில் அதிக முறை கிண்ணம் வென்ற வீரர்கள் பட்டியலில் முதலிடத்தை சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஸ்பெயினின் ரபெல் நடாலுடன் பகிர்ந்து கொண்டார்.




வெற்றிக் கிண்ணத்துடன் ஜோகோவிச்

**21 வெற்றி**

ஜோகோவிச், இந்த ஆண்டு கிராண்ட்ஸ்லாம் அரங்கில் தொடர்ச்சியாக 21 வெற்றிகளை பதிவு செய்துள்ளார்.

அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபனை தொடர்ந்து விம்பிள்டனிலும் கிண்ணம் வென்றுள்ள இவர், யு.எஸ்., ஓபனில் சாதிக்கும் பட்சத்தில் 'கலண்டர் கிராண்ட்ஸ்லாம்' பட்டம் வெல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களின் பாதுகாப்பு, உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## -மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து-

(கொழும்பு)

**இலங்கையின் ஆடைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் வெறுமனே அவர்களது குடும்பங்களுக்கு அவசியமான வருமானத்தை மாத்திரம் ஈட்டவில்லை. மாறாக தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், நாட்டின் பொருளாதாரத்திற்கு அவர்கள் பாரியதொரு பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். எனவே அவர்களுடைய உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டிய அதேவேளை, அவர்களது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் தொழிற்சாலை ஊழியர்களை உரிய பாதுகாப்புடன் தனிமைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கமும் தொழிற்சாலை உரிமையாளர்களும் மேற்கொள்ளவேண்டும். அதே வேளை அக்காலப்பகுதியில் அவர்களுக்குரிய கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படுகின்றது என்பதும் உறுதிசெய்யப்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் சுகாதாரப்பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கமும் தொழிற்சாலை ஊழியர்களும் ஆடை உற்பத்திக்கான மூலப் பொருட்களை வழங்கும் சர்வதேச நிறுவனங்களும் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஏழு பெண்களில் ஒருவர் என்ற வீதத்தில் ஆடைத்தொழிற்துறையில் பணிபுரிகின்றார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஆடைத்தொழிற்சாலைகளில் மீண்டும் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் கொத்தணிகள் பதிவாகி வருகின்றன.

அவ்வாறிருக்கையில் உரிய சுகாதாரப்பாதுகாப்பு நடைமுறைகளின்றி தொழிற்சாலை ஊழியர்கள் பணியை முன்னெடுப்பதற்கு அத்தொழிற்சாலைகளின் முகாமையாளர்களினால் நிர்ப்பந்திக்கப்படுவதாக சிலர் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர் உரிமைகள் தொடர்பான செயற்பாட்டாளர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் வெறுமனே அவர்களது குடும்பங்களுக்கு அவசியமான வருமானத்தை மாத்திரம் ஈட்டவில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# யாழ்ப்பாணம் உட்பட சில இடங்களில் இன்னும் குறையாத கொரோனா

(கொழும்பு)

நாட்டில்பரவிவரும்கொரோனா வைரஸ் தொடர்பிலான புதிய அறிக்கையின் பிரகாரம், யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும்காலி ஆகிய மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, குறைவடைந்துள்ளது. அந்த ஐந்து மாவட்டங்களையும் தவிர, ஏனைய மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 100ஐ விடவும் குறைவாகும். (நி-5)

# ராஜபக்ஷ குடும்பத்தின் நிறுவனமாக இலங்கை - நியூயோர்க் டைம்ஸ்

(நியூயோர்க்)


இலங்கை ராஜபக்ஷ குடும்பத்தின் நிறுவனமாக மாறி வருவதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில், ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவின் மூன்று சகோதரர்கள் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்து வருவதாகவும் அவர்களின் புதல்வர்களுக்கும் அதிகாரமிக்க பதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதியமைச்சராக பசில் ராஜபக்ஷ பதவியேற்றுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நியூயோர்க்டைம்ஸ் பத்திரிகை இது குடும்ப ஆட்சியை உறுதிப்படுத்தும் நடவடிக்கை எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரச துறையிலுள்ள நிறுவனங்களின் கிட்டத்தட்ட 80 வீதமான நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (நி - 5)

# சந்தன மரங்களினால் உருவான பூங்கா



(கொழும்பு)

கொழும்பில் அமைக்கப்பட்ட இலங்கையின் முதலாவது சந்தனமர பூங்காவின் பணிகள் நிறைவடைந்துள்ளன. விரை வில் பொதுமக்களுக்கு திறந்து வைக்கப் படவுள்ளது. ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு வசதி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரின் அறிவுறுத்தலின் கொழும்பு [illegible] [illegible] ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்விமுறை இல்லை


## தீர்வு காணுமாறு ஆதிவாசிகளின் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் உள்ள பிரச்சினைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலையிட்டு அதற்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டும் என ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களுக்கு சமமான முறையில் கல்வி வழங்கப்படுவதில்லை. நாட்டின் எதிர்கால சந்ததி தொடர்பில் சிந்தித்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலையிட்டு இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)



இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜாகப்பை புத்த சாசன மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளரான சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள இந்திய பிரதி உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் இடம்பெற்றது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் அனர்த்தம்; நட்டஈடு வழங்க ஆராய்வு

(யாழ்ப்பாணம்)


எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான முதற்கட்ட நட்டஈட்டினை வழங்கும் செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு வழங்கினார்.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், மற்றும் துறைசார் பணிப்பாளர்களுடனான மீளாய்வுக் கலந்துரையாடலின் போதே மேற்குறித்த விடயம் ஆராயப்பட்டது.

கடற்றொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில், நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற களப்பு அபிவிருத்தி, வி.எம்.எஸ்.கருவிகளைப் பொருத்துவதற்கான முதற்கட்டப் பயனாளர் தெரிவு உட்பட அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (4-6)

## யாழ். பல்கலைக்கழக

## விவசாய பீடத்திற்கு தேவையான நீரை கிளி.புளிக்குளம் ஊடாக பெற நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி புளிக்குளத்துக்கு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன் விஜயமொன்றை மேற்கொண்டார். கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் இவ்விஜயத்தின் போது உடனிருந்தார்.

புளிக்குளத்தை அபிவிருத்தி செய்து கால்வாய்களை அமைப்பதன் ஊடாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளும், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (ஜெய்கா) அனுசரணையில் யாழ். பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலைய மாணவர்களும் வட மாகாண விவசாயிகளும் பெரும் பயனடைவர் என இராஜாங்க அமைச்சின் செயலாளரிற்கு தெரிவிக்கப்பட்டது. (4-7-6)



வீட்டுக்கு வீடு தென்னை மரம் எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக கடந்த சனிக்கிழமை காலை எழுதுமட்டுவாழில் தென்னை மரக் கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. (படம்- சுபேசன்)

## ஒன்லைன் கற்பித்தலில் இருந்து அதிபர், ஆசிரியர்கள் விலகல்

(கொழும்பு)

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேற்று காலை முதல் ஒன்லைன் கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து விலகி, தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியதாக தெரிவித்து அடக்குமுறையை கையாளுதல் மற்றும் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் சாதகமாக பதிலளிக்கும் வரை தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என கல்வி தொழிற் சங்கங்களின் சம்மேளன தலைவர் உலபனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, Online கற்பித்தலில் இருந்து விலகும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு தாம் ஆதரவளிக்கவில்லை என சுதந்திர ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5-4)

## 344 கிலோ கஞ்சாவுடன் காங்கேசன்துறையில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பகுதியில் நேற்று 344 கிலோ 560 கிராம் எடையுடைய கஞ்சாப் பொதிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவது, இந்தியாவில் இருந்து கடல் வழிப்பாதை மூலமாக கஞ்சா கடத்தி வருவதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சுமார் 344கிலோ 560 கிராம் எடையுடைய கஞ்சா பொதிகளுடன் மூவர், காங்கேசன்துறை கடலில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸில் கையளிக்கப்படவுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. (4-7-6-101-104)

## இணையவழியில் திருவாசக விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்தத் திருவாசக விழா மாணிக்கவாசக சுவாமிகளின் குரு பூசைத் தினமாகிய இன்று செவ்வாய்க்கிழமை இரவு எட்டு மணிக்கு சூம் இணைய வழியில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பங்கேற்பதற்கான சூம் தொடர்பு எண் 5847908072 கடவுச்சொல் KTC ஆகும்.(4-6-7)

### வீட்டுத்திட்ட முறைகேடு தொடர்பில் விசாரிக்க

## பிரதமரின் விசேட பிரதிநிதி யாழிற்கு நேரடி விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கான அரசாங்கத்தின் மீள்குடியேற்ற, வீட்டுத்திட்ட மற்றும் புனர்வாழ்வு ஒருங்கிணைப்பாளரான காசிலிங்கம் கீதநாத் நேற்று யாழ்ப்பாணத்திற்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண் டார். இந்த விஜயம் தொடர்பில் பிரதமரின் விசேட பிரதிநிதி காசிலிங்கம் கீதநாத்தின் டுவிட்டர் பக்கத்தில் இடப்பட்டுள்ள பதிவில், எப்போதும் மக்களிடம் நேரடி அவர்கள் எதிர்நோக்கும் குறைகள் தொடர்பில் கலந்துரையாட எதிர்பார்க்கிறோம். யுத்தத்தின் போது பாதிப்பிற்கு உள்ளான குடும்பங்களை, அவர்களுக்கு நிலம் மற்றும் வீட்டுத் திட்டங்களை வழங்குவதன் மூலம் மீள்குடியேற்ற இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

மீள்குடியேற்ற அமைச்சால் வரையப்பட்ட புள்ளிகள் முறையின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் மூளாய் அருள்மிகு ஸ்ரீ ஹறிகரபுத்திர காயத்திரி அன்னை திருக்கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தியாக. உமாசுதக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பில் மீள் பரிசீலனை செய்வது அவசியம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

**நாட்டில் அத்தியாவசியமற்ற சேவைகளுக்காக பயணக்கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பிலான அரசாங்கத்தின் தீர்மானத்தினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

நாட்டை மீண்டும் திறப்பது பொருளாதாரத்தின் முக்கிய படியாகும்.எனினும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் தற் போதைய தொற்று நோயின் நிலைமையினை கருத்திற் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வது அவசியமாகுமென சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே எச்சரித்துள்ளார். (நி-5)

## இதுவரை 40 லட்சம் தடுப்பூசிகளை செலுத்தி புதிய மைல்க்கல்லை எட்டியது இலங்கை

(கொழும்பு)

நாட்டில் 40 இலட்சத்துக்கு மேற்பட்டோருக்கு கொவிட் 19 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. நேற்று காலை வரையான தரவுகளின் பிரகாரம் 40 இலட்சத்து 9 ஆயிரத்து 740 தடுப் பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு தகவல் திணைக்கள தரவுகளின்படி மே 12 ஆம் திகதி ஒரு மில்லியன் தடுப்பூசிகள் என்ற மைல்க்கல்லை எட்டியது. ஜூன் 8 வரை 2 மில்லியன் தடுப்பூசிகள் போடப்பட்டன. ஜூலை 5 ஆம் திகதி 3 மில்லியன் தடுப்பூசிகள் என்ற இலக்கு எட்டப்பட் டது.

நேற்று ஜூலை 12 ஆம் திகதி நிலவரப்படி 4 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் கொவிட் 19 தடுப்பூசிகளைப் பெற்றனர். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:31 ½செவ் 6 சூரி 2 ல்
உயரம்:6'2"
தகைமை/தொழில்: Marchan Ship Work
எதிர்பார்ப்பு: படித்தஅழகான பெண், உள் நாடு மட்டும்
தொ.இ: B/11916

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 85 செவ்.சூரி 7 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:முகாமைத்துவ உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: நிரந்தர அரச/தனியார் தொழில்
தொ.இ: B/11918

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: -செவ் 2 சூரி 3 இல்
உயரம்:173cm
தகைமை/தொழில்: Lecturer (GOV)
எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண், உள்நாடு
தொ.இ: B/11919

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 23 செவ் 11 சூரி 2 இல்
உயரம்:173cm
தகைமை/தொழில்: Accountant கட்டார்
எதிர்பார்ப்பு:A/Lபடித்த பெண் /பட்டதாரி உள்நாடுமட்டும்.
தொ.இ: B/11920

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 11 ½ செவ்.சூரி 10 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:. தனியார் வேலை
எதிர்பார்ப்பு:உள்நாடு - உத்தியோகம், வெளிநாடு
தொ.இ:G/11921

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா:14 ½ செவ் 10 சூரி 2 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:A/L நூலக பொறுப்பாளர்
எதிர்பார்ப்பு:தனியார், அரச உத்தியோகம், உள்நாடுமட்டும்
தொ.இ:G/11923

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா:30.05 செவ் 11 சூரி 1 இல்
உயரம்:165cm
தகைமை/தொழில்:மருத்துவர் (அரச)
எதிர்பார்ப்பு:வைத்தியர்
தொ.இ:G/11925

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா:80 செவ் 8 சூரி 7 இல்
உயரம்:178cm
தகைமை/தொழில்: Restourant
எதிர்பார்ப்பு:உள்நாடு.வெளிநாடு
தொ.இ:G/11928

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



**சென். ஜோன்ஸ் கல்லூரி**
**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**
**தரம் 01,06 இற்கான மாணவர் அனுமதி-2022**
**(விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு)**

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 14.07.2021 முதல் 28.07.2021 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 30.07.2021 வெள்ளிக் கிழமை. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
2. விண்ணப்பப்படிவங்களை அலுவலக நாட்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
3. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.
4. ஒரு படிவத்திற்கானதும், பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1500.00
5. வயதெல்லைகள்:
   அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2016 க்கும் 31.01.2017 க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2011 க்கும் 30.01.2012க்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
6. தரம் 6 (தமிழ் மொழி மூலம்/இருமொழி மூலம்) அனுமதிக்கான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்படலாம்.
7. தரம் 01 இற்குரிய நேர்முகப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்படும்.
8. தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 16.10.2021 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

**தரம் (A/L) 2023) இற்கான அனுமதி**

தரம் 12 இற்கான (A/L) 2023 Batch) (விஞ்ஞானம் (தமிழ் / ஆங்கில மொழி மூலம்), கணிதம் (தமிழ் / ஆங்கில மொழி மூலம்), வர்த்தகம் (தமிழ் / ஆங்கில மொழிமூலம்), கலை (தமிழ்மொழி மூலம்), தொழில்நுட்பவியல் (தமிழ் மொழி மூலம் - சென் ஜோன்ஸ் கல்லூரியில் மட்டும்). விண்ணப்பங்கள் அந்தந்த கல்லூரிகளில் க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றவுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இது தொடர்பாக அந்தந்தக் கல்லூரி அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்

குறிப்பு:
தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியில் 'தரம் 6 இற்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

**அதிபர்கள்** (C-2337)



**சித்த ஆயுர்வேத நிபுணர்களின் ஆலோசனையும் சிகிச்சையும்**

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக சித்த ஆயுர்வேத நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை மக்களுக்கு வழங்கி வருகிறோம்.
பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், சித்த ஆயுர்வேத அறுவை மருத்துவமும், வர்மசிகிச்சையும், பஞ்சகர்ம சிகிச்சை, உணவு போசணை, காயகல்ப மற்றும் யோகா போன்றவற்றில் நிபுணத்துவமுள்ளவர்களினால் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வியாழக்கிழமையும் காயகல்ப சிகிச்சையும், உணவு போசணையும் சிகிச்சைக்கான மருத்துவ ஆலோசனைகள், பயிற்சிகள், பி.ப 3 மணியில் இருந்து 6 மணி வரை வழங்கப்படவிருக்கிறது. முதலில் காயகல்ப நிபுணத்துவரினால் கண் பார்வைத்திறனை நல்ல நிலைக்குக் கொண்டுவரும் காயகல்பப் பயிற்சிகள், மூலிகை மருத்துவசிகிச்சை நடைபெறும். பின் உணவு போசணை சிகிச்சை நிபுணரினால் ஆலோசனைகள் வழங்கப்படும். இச்சிகிச்சை முறையில் ஒரு தடவையில் 50% பார்வைத்திறனை தாங்கள் உணர்வீர்கள்.
Dr.G.Sritharan BSMS (Jaf)M.Phil (Jaf), Ad. Dip. In Human Exe. & Yoga (Aliyaru) & Phd( India)
Dr.T.Theleepan BSMS (Jaf),M.Sc (Pera).
பொது மருத்துவசிகிச்சையில் மாறாத குடற்புண்கள், மாறாத இருமல், ஆஸ்துமா, நாட்பட்ட சர்மநோய்கள், வாதநோய்கள், பாரிசவாதம், நீரிழிவு மற்றும் பல நோய்களுக்கு பொது மருத்துவ நிபுணர் Dr.Anpuchelvy Sritharan BSMS (Jaf) M.D (India) அவர்களினால் சிகிச்சை வழங்கப்படவுள்ளது.
இடம்: ஆயுர்வேத வைத்தியசாலை கைதடிக்கு முன்பாக உள்ள கனி மெடிகிளினிக்கில் நடைபெறவுள்ளது. முற்பதிவு செய்து கொள்ளுங்கள்
(7192)
தொடர்புகளுக்கு- நிர்வாக இயக்குனர்.
0774382374, 0779268850


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் இருவருக்கு டெங்கு

(குருமன்காடு)

வவுனியாவில் இருவருக்கு டெங்கு நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவின் திருநாவற்குளம் மற்றும் சாந்தசோலை ஆகியபகுதிகளில் இருந்து இரு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

தற்போதையை கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியில் டெங்குநோய்த் தாக்கமும் ஏற்பட்டுள்ளதால் நுளம்புகள் பெருகாத வண்ணம் பொது மக்கள் தமது இடங்களை சுத்த மாக வைத்திருந்து நோய்த் தொற்றிலிருந்து தம்மையும் அயலவர்களையும் பாதுகாத்துக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (7-4-250)


## பத்து வருடங்களின் பின்னர் திருமுறிகண்டி குளம் புனரமைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு திருமுறிகண்டி குளம்நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள திருமுறிகண்டி குளம் உடைந்த நிலையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டது.

மேற்படி குளத்தை புனரமைத்து தருமாறு விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் விடுத்த தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கிராமிய குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்படி புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-4-315)

## வெடிக்காத நிலையில் எறிகணை மீட்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலைப்பாணி கிராமத்தில் குளத்தை அண்மித்த பகுதியில் வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அப்பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனம் தெரிவித்துள்ளது. (7-4-315)

## கட்டுத்துப்பாக்கி வெடித்து ஒருவர் படுகாயம்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் மிருக வேட்டை ஆடுவதற்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கி தவறுதலாக வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் 35 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர். (7-4-316)



1990ஆம் ஆண்டு கொக்காவில் செய்தி ஒலிபரப்பு கோபுரம் மற்றும் இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது உயிரிழந்த கப்டன் சாலிய அலதெனிய பி.டபிள்யூ.வி மற்றும் படையினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டவர்களின் 31ம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கொக்காவில் படை வீரர்கள் நினைவு தூபியில் இடம்பெற்றது. (படம்: தவசீலன்)

# பிரதான போக்குவரத்து பாதை 40 வருடமாக புனரமைக்கப்படவில்லை

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

**சுமார் 20 கிலோ மீற்றர் நீளமான வீதி கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் வீதியின் இருமருங்கிலும் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன.**

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் முதல் மூன்றுமுறிப்பு வரையான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் காணப்படுவதனால் கொம்பு வைத்த குளம் மற்றும் பாலைப்பாணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் வெள்ளாங்குளம் வீதியின் வன்னிவிளாங்குளம் சந்தியிலிருந்து பாலைப்பாணி கொம்பு வைத்தகுளம் ஊடாக மூன்றுமுறிப்பு சந்தி வரை செல்லும் சுமார் 20 கிலோ மீற்றர் நீளமான வீதி கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் வீதியின் இருமருங்கிலும் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன .

இவ்வாறான நிலையில் குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்களின் பிரதான போக்குவரத்து பாதையொன்றாகவே இவ்வீதி காணப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ள மக்கள் குறித்த வீதியை புனரமைத்து தருமாறு கோரியுள்ளனர். (7-4-315)



வறுமைக்கோட்டுக்குட்பட்ட கிளிநொச்சி கோணாவில் பகுதியில் வசித்து வரும் குடும்பம் ஒன்றுக்கு இராணு வத் தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. (படம்: தேவானந்தன்)

# முறிகண்டி பகுதியில் விபத்து; சிலமணி நேரம் போக்குவரத்து பாதிப்பு




(தருமபுரம்)

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி பகுதியில் நேற்று நள்ளிரவு விபத்து சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

சம்பவம் நள்ளிரவு 12 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து யாழ்.நோக்கி பயணித்த வான் முறிகண்டி பிள்ளையார் ஆலயம் முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது.வானின் சாரதி ஆலயத்திற்கு சென்றிருந்த நிலையில், வாகனத்தில் சிலர் இருந்துள்ளனர்.

இந்த நிலையில்-ஏ 9 வீதியில் பயணித்து பால கட்டுமான பணிக்காக கொங்கிறீட் தூண் ஏற்றிச் சென்ற கனரக வாகனம் மோதியுள்ளது.

சம்பவத்தில் வான் பலத்த சேதங்களிற்கு உள்ளான போதிலும் வானில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக தப்பித்துக் கொண்டனர்.

சம்பவம் இடம்பெற்றதை அடுத்து குறித்த கனரக வாகனம் வீதிக்கு குறுக்கே நின்றமையால் சில மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (7-4-316-281-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

13.07.2021
ஆனி 29, செவ்வாய்க்கிழமை
திருதியை முற்பகல் 7.56 மணிவரை
மகம் பின்னிரவு 3.31 மணிவரை
சுபநேரம் 10.29-11.59 மணிவரை
இராகுகாலம் 2.59-4.29 மணிவரை
சந்திராஷ்டமம்:-உத்தராடம்,திருவோணம்
சதுர்த்தி விரதம், மணிவாசகர் குருபூசை வளவன்

**மேஷம்** — சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** — குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்,நன்மைகள் நடைபெறும் நாள்.

**சிம்மம்** — நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச் சுமை கூடும் நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி** — வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**துலாம்** — எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்** — தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியா கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**தனுசு** — அரைகுறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

**மகரம்** — கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள் அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்** — மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** — சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், உடல்நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

இன்றைய நாளைத் தனதென அமைப்பவர்களே இன்ப மனிதன்

# பைசர் தடுப்பூசி கிடைக்காது ஏமாற்றத்துடன் திரும்பிய மக்கள்

(மன்னார்)

**மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இரண்டு பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட "பைசர்" கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளின் போது பல மணி நேரம் காத்திருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு குறித்த தடுப்பூசி வழங்க ப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.**

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் முதல் கட்டமாக "பைசர்" கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள கரையோர பகுதிகளில் வசிக்கும் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பைசர் கொரோனா தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மன்னார் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வழங்கிய அறிவித்தல்களுக்கு அமைவாக குறித்த கிராமங்களை சேர்ந்த மக்கள் தமக்கு உரிய நிலையங்களுக்கு சென்றனர்.எனினும் நீண்ட வரிசையில் மக்கள் தமக்கு உரிய நிலையங்களுக்கு முன் நின்றுள்ளனர்.எனினும் குறிப்பிட்ட நேரத்துடன் மக்கள் திருப்பி அனுப்பப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

பல கிராமங்களை ஒன்றிணைத்து தடுப்பூசியை வழங்க மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாகவே மக்கள் ஏமாற்றத்துடன் திருப்பி அனுப்பப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதனிடம் வினவிய போது.

மன்னார் மாவட்டத்திற்கு என வழங்கப்பட்ட 20 ஆயிரம் பைசர் கொரோனா. தடுப்பூசிகளில் உயிலங்குளம் மற்றும் முருங்கன் பகுதிகளில் உள்ள வயோதிபர்களுக்கு வழ்ங்கவே சுமார் 300 தடுப்பூசிகள் மிகுதி உள்ளன. ஏனையவை முடிவடைந்து விட்டன. மேலும் 20 ஆயிரம் "கொரோனா" தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். குறித்த தடுப்பூசிகள் கிடைத்தவுடன் விடுபட்ட 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வழங்கப்படும்என அவர் மேலும் தெரிவித்தார். (7-4-285)

# சௌபாக்கிய விற்பனை நிலையம் அமைப்பதில் குழப்ப நிலை

(நெளுக்குளம்)

வவுனியா தாண்டிக்குளம் ஏ-9வீதியின் கரையில் சௌபாக்கியா விற்பனை நில்லயம் அமைப்பதற்கு புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்கள் தடை ஏற்படுத்திய நிலையில் பிரதேச செயலாளரின் தலையீட்டினால் நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் ஏ-9 வீதி மற்றும் புகையிரத பாதைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள அரச காணியில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களிற்கான சௌபாக்கியா விற்பனை நிலையம் ஒன்றினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இன்றைய தினம் இடம்பெறவிருந்தது.

இதனையடுத்து குறித்த நிலப்பரப்பினை துப்புரவாக்கும் பணி பயனாளர்களின் பங்களிப்புடன் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது குறித்த பகுதிக்கு வருகைதந்த புகையிரத திணைக்களத்தின் உத்தி யோகத்தர்கள் துப்புரவு பணிக்கு தடை ஏற்படுத்தியதுடன், இது புகையிரத திணைக்களத்திற்குரிய நிலம் எனத் தெரிவித்தனர்.

இதனால் சற்றுநேரம் குறித்த பகுதியில் குழப்பமான சூழல் ஏற்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்குசென்ற பிரதேச செயலாளர், புகை யிரத திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்ததையடுத்து நிலைமை சுமுகமாக்கப்பட்டு துப்புரவாக்கும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

(7-4-299)

# வீட்டை கட்ட முடியாத குடும்பங்களுக்கு படையினரின் உதவி தேவை

## கரைச்சி பிரதேச செயலாளர்

(முறிகண்டி)

பாதிக்கப்பட்ட மக்களிற்கு கிடைத்துள்ள 6 லட்சம் பெறுமதியான வீட்டைக்கட்ட முடியாத குடும்பங்களிற்கு படையினரின் உதவியை வழங்க வேண்டும் என கரைச்சி பிரதேச செயலாளர் பா. ஜெயகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி பகுதியில் இராணுவத்தினரால் 11 இலட்சம் பெறுமதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவத்தினர் இவ்வாறான சமூக பணிகளை மேற்கொள்வது தொடர்பில் பாராட்டுகிறேன். எமது பிரதேசத்தில் இவ்வாறான வீடுகளை அமைத்து சமூகத்திற்கு செய்யும் பணிகளிற்காக பிரதேச செயலகம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது மக்களிற்கு தற்போது பத்து லட்சம் மற்றும் 6 லட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டங்கள் கிடைத்துள்ளன. அதில் 6 லட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டம் கிடைத்தவர்கள் 2 அங்கத்தவர்களிற்கு உட்பட்டவர்களாவர். அவர்களில் சில குடும்பங்கள் குறித்த தொகைக்குள் கட்டி முடிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அவ்வாறான குடும்பங்களிற்கு படையினரின் உதவியுடன் வீடுகளை அமைத்து கொடுக்க நான் கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்தில் பிரதேச செயலாளரின் கோரிக்கையை ஏற்பதாகவும், 57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அவ்வாறான குடும்பங்களை அடையாளம் காட்டுமாறும் கிளிநொச்சி இராணுவ தலைமைக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி.ரணசிங்க பிரதேச செயலாளரிடம் தெரிவித்தார். (4-7-6-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவில் மின்னல் தாக்கி 68 பேர் பலி



(டில்லி)

இந்தியாவின் உத்தரபிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் நேற்று முன்தினம் பதிவான மின்னல் தாக்க சம்பவங்களில் மொத்தம் 68 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தர பிரதேசத்தில் பலத்த மின்னல் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை நேற்றுக் காலை 41 ஆக உயர்ந்துள்ள நிலையில், மத்திய பிரதேசத்தில் ஏழு பேர் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தானில் ஞாயிற்றுக் கிழமை மின்னல் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில், சிறுவர்களும் உள்ளடங்குவர்.

மேலும் அங்கு 10 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

## பைஸர்-மொடர்ன பக்கவிளைவாக இதய

(வோஷிங்டன்)


**கொரோனா வைரஸ் தடுப்பூசிகளான மொடர்னா தடுப்பூசிகளின் அரிதான பக்கவி அழற்சி ஏற்படக்கூடும் என்று ஐரோப்பிய ஒழுங்காற்று அமைப்பு தெரிவித்துள்ளது.**

பொதுவாக இந்த மாதிரியான பக்க விளைவுகள், இளம் வயது ஆண்களுக்கு ஏற்படுவதாக ஐரோப்பிய மருத்துவ முகமை கூறியுள்ளது.

இதய அழற்சி தொடர்புடைய மையோகார்டிட்டிஸ் மற்றும் பெரிகார்டிட்டிஸ் என்ற இரண்டு அறிகுறிகள் பைஸர் மற்றும் மொடர்னா

## கொரோனா வைரஸின் பரவல் வேகம் அதிகரிப்பு

### எச்சரிக்கும் விஞ்ஞானிகள்



(சென்னை)

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு குறைந்தாலும், அதன் பரவல் வேகம் 15 நாட்களில் மீண்டும் அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதனால் முழு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து சென்னை மருத்துவ அறிவியல் மையத்தின் சீதாபரா சின்ஹா தெரிவிக்கையில், 'கொரோனா பரவல் குறித்து கணித ரீதியில் ஆய்வு செய்து வருகிறோம்.

மே மாதம் 15 - ஜூன் மாதம் 20 வரை வைரஸ் பரவல் வேகம் 0.78 சதவீதமாக இருந்தது. ஜூன் மாதம் 20 - ஜூலை 7ஆம் திகதிவரை இது 0.88 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதாவது வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 100 பேர் மேலும் 88 பேருக்கு வைரஸ் தொற்றை பரப்புகின்றனர். அதனால் மக்கள் அதிகளவில் கூட ஆரம்பித்துள்ளனர். கணக்கின்படி ஒரு சதவீதத்துக்கும் அதிகமாக பரவல் இருந்தால் அது ஆபத்து. நாட்டின் மொத்த சராசரிஒன்றுக்கும்கீழே உள்ளது' என தெரிவித்துள்ளார். (8-7)

## கேரளாவில் அதிகரிக்கும் ஜிகா வைரஸ்

(டில்லி)

கேரளத்தில் குழந்தை உட்பட மேலும் 3 பேருக்கு ஜிகா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இது குறித்து அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறுகையில், 22 மாதக் குழந்தைக்கும் மேலும் இருவருக்கும் ஜிகா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இத்துடன் மாநிலத்தில் மொத்தம் 18 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

## அமெரிக்காவில் வி

(வோஷிங்டன்)

அமெரிக்கர்களுக்கு வரும் மாதங்களில் 3 ஆவது டோஸ் கொரோனா தடுப்பூசி தேவைப்படும் என ஜனாதிபதி பிடனின் தலைமை மருத்துவ ஆலோசகரும் தொற்றுநோய் நிபுணருமான ஆண்டன் பௌச்சி தெரிவித்தார்.



தடுப்பூசி தயாரிப்பு நிபுணரான பைசர், கொரோனா தடுப்பூசியின் 2 டோஸ்களை தொடர்ந்து 12 மாதங்களில் கூடுதலாக ஒரு டோஸ் போட

## தலிபான்களின் முன்னேற்றத்தால் இந்திய அதிகாரிகள் வெளியேற்றம்

(டில்லி)

ஆப்கானிஸ்தானின் காந்தஹாரில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் சுமார் 50 தூதர்கள் மற்றும் பிற ஊழியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தெற்கு நகரத்தைச் சுற்றியுள்ள முக்கிய பகுதிகளை தலிபான் போராளிகள் கைப்பற்றியதை அடுத்து, இந்திய விமானப்படை விமானத்தில் காந்தஹாரில் இருந்து சுமார் 50 தூதர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை இந்தியா வெளியேற்றியுள்ளது.

தூதரகத்தில் இருந்த பணியாளர்கள் விமானப்படை விமானங்களினூடாக டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

"காந்தஹாரில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் மூடப்படவில்லை. இருப்பினும், காந்தஹார் நகருக்கு அருகே [illegible] மையான மோதல் காரண[illegible] இந்தியாவைச் சேர்ந்த பணியாளர்கள் தற்போதைக்கு மீண்டும் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இது முற்றிலும் தற்காலிக நடவடிக்கை என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். தூதரகம் எங்கள் உள்ளூர் ஊழியர்கள் மூலம் தொடர்ந்து செயல்படுகிறது" என்று வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சியின் [illegible] (8-7)

## வெப்ப காலங்களில் புதிய திட்டங்களை

(டொரன்டோ)

கடுமையான வெப்ப காலங்களில் காட்டுத்தீயைத் தடுக்கும் நோக்கில் கனடா புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

கனடாவில் கடந்த மாதம் முன்னொருபோதும் இல்லாத வகையில் வெப்ப அலை அதிகரித்தது. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் லிட்டன் நகரம் காட்டுத் தீயால் அழிந்தது. மேற்கு பகுதிகளில் பல இடங்களில் காட்டுத் தீ பரவிய நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெப்ப நிலை 30 பாகை செல்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ா தடுப்பூசிகளின்

## ... அழற்சி ஏற்படக்கூடும்

### ... பைஸர் மற்றும் ...விளைவாக இதய ... ஒன்றிய மருந்து

கொரோனா தடுப்பூசிகளைச் செலுத்துவதால் ஏற்படுகின்றன.

இது தொடர்பாக பிரித்தானிய மருந்து மற்றும் சுகாதார பொருட்கள் ஒழுங்காற்று முகமை விசாரித்து வருகிறது.

பெரும்பாலும் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டு 14 நாட்களுக்குள் இப்படிப் பட்ட இதயக் கோளாறுகள், மிக அரிதாகவே ஏற்படுகின்றன. பிரித்தானியாவிலும், ஐரோப்பாவிலும் கொரோனாவால் ஏற்படும் பக்க விளைவுகள் பட்டியலில் மையோகார்டிட்டிஸ், பெரி கார்டிட்டிஸ் ஆகியவை அதிகாரபூர்வமாக சேர்க்கப்படவுள்ளன. (8-7)

## உலகளவில் கொரோனா

**உயிரிழப்பு :-4 053 413**

**தொற்று :- 187 845 375**

**(நேற்று மாலை நிலவரம்)**

## ...விரைவில் 3 டோஸ்

...ப்பட வேண்டும் எனவும், அதற்கு அங்கீகாரம் கோரியும் அமெரிக்க அரசிடம் விண்ணப்பித்திருந்தது.

ஆனால், இந்த நேரத்தில் கூடுதல் டோஸ் தடுப்பூசி தேவை அவசியம் எனக் கருதவில்லை என்று கூறி பைசரின் விண்ணப்பத்தை நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், உணவு மற்றும் மருந்து நிர்வாகத் துறைகள் நிராகரித்தன.

இந்நிலையில், ஆண்டனி பௌச்சி தெரிவித்திருப்பது, இப்போது நம்மிடம் உள்ள தரவுகளின் அடிப்படையில் மக்களுக்கு மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அதற்கான தரவுகள் கிடைக்கும்போது, வயது மற்றும் உடல்நிலையைப் பொருத்து மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்துவது குறித்து அரசு வலியுறுத்தலாம் என்றார் அவர். அமெரிக்காவில் 48 சதவீதம் பேர் முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(8-7)

## ...காட்டுத்தீயை தடுக்க அறிவித்தது கனடா

...யஸைத் தாண்டும்போது ரயில்களின் வேகத்தைக் குறைக்க வேண்டும். அத்துடன், பயணங்களின்போது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் எவையும் ரயிலில் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என மத்திய போக்குவரத்து திணைக்களம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் இந்த அறிவுறுத்தல்கள் நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (8-7)

## ஜனாதிபதி சிறைபிடிப்பு வெடித்தது வன்முறை

(சியோல்)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா சிறையில் அடைக்கப்பட்டதை யடுத்து நாட்டின் இரு மாகாணங்களில் வன்முறைக் கலவரம் வெடித்துள்ளது.

இதனால் ஒரே இரவில் கடைகள் சூறையாடப்பட்டன, நெடுஞ்சாலைகளின் ஒரு பகுதி மூடப்பட்டது.

62 வன்முறையாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கிற்காக ஜூமா வாரம் 15 மாத சிறைத்தண்டனை அனுபவிப்பதற்கான சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். (8-7)

## டெல்டாவிடம் இருந்து ஸ்புட்னிக் வி பாதுகாக்கும்




(மொஸ்கோ)

இந்தியாவில் முதன்முதலாக காணப்பட்ட டெல்டா வைரஸ், இப்போது உலக நாடுகளில் எல்லாம் பரவிவிட்டது. இந்த வைரஸ் வேகமாகப் பரவுகிற தன்மையைக் கொண்டுள்ளது.

இந்த வைரஸுக்கு எதிரான பாதுகாப்பை ஸ்புட்னிக்-வி போன்ற 'மெசேஞ்சர் ஆர்.என்.ஏ.' தடுப்பூசிகள் கொண்டுள்ளன என்று ரஷ்யாவின் நோவாசி பிர்ஸ்க் மாகாண பல்கலைக் கழகத்தின் ஆய்வக தலைவரும், ரஷ்ய அறிவியல்கள் அகடமியின் உறுப்பினருமான செர்ஜி நெடேசோவ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில், "இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிற நாடுகளில் இருந்து வருகிற தரவுகள், டெல்டா வைரஸுக்கு எதிராக ஸ்புட்னிக்-வி போன்ற மெசேஞ்சர் ஆர்.என்.ஏ. தடுப்பூசிகள் 90 சதவீத பாதுகாப்பு இருப்பதை காட்டுகின்றன. ஏற்கனவே உருவாக்கிய தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்பதால் அவற்றை பயன்படுத்தலாம்" எனவும் அவர் தெரிவித்தார். (8-7)





அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட விர்ஜின் கேலடிக் நிறுவனம், தனது விண்வெளி சுற்றுலா திட்டத்திற்கான இறுதிக்கட்ட சோதனையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. விர்ஜின் நிறுவனத்தின் தலைவர் ரிச்சர்ட் பிரான்சன் உள்ளிட்ட 6 பேர் பயணம் மேற்கொண்டனர்.

## தடுப்பூசி பற்றாக்குறை நீடிக்கிறது

### ராகுல் குற்றச்சாட்டு

(டில்லி)

இந்தியாவில் அமைச்சர்களின் எண்ணிக்கைதான் அதிகரிக்கிறது. ஆனால் தடுப்பூசி பற்றாக்குறை நீடிக்கிறது என காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்தார். அந்த தகவலுடன் தடுப்பூசி குறித்த அட்டவணை ஒன்றையும் தமது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

குறித்த அட்டவணையில், இந்தியாவில் வரும் டிசெம்பர் மாதத்திற்குள் 60 சதவீதமானோருக்கு 2 டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும். இதற்கு நாள்தோறும் 88 இலட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்... எனத் தெரிவிக்கப்பட்டு...ளது. (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை மீட்டெடுக்க நாடு முழுமையாக திறக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

**பொருளாதாரத்தை மீட்டெடுக்க தடுப்பூசி நடவடிக்கைக்கு பின்னர் நாட்டை மீண்டும் திறக்க வேண்டிய அவசியம் குறித்து நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.**



அண்மையில் பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவராக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதன்போது நாட்டின் உற்பத்தித் தளத்தை புத்துயிர் பெற வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியதுடன் அவ்வாறு செய்யாவிட்டால் பொருளாதாரத்தை கொண்டு செல்லத் தேவையான பணம் இருக்காது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் பொருளாதார நடவடிக்கைகளை கட்டுப்படுத்தினால் நெருக்கடி நிலைமை அதிகரித்து வேலையின்மை மற்றும் வறுமை அதிகரிக்கும் என்றும் பசில் ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-5)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விரும்பினால் வெளியேறலாம்- திலும் அமுனுகம

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விரும்பினால் அரசாங்கத்திலிருந்து விலகலாம் என தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம விலகினால் அரசாங்கத்தின் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படாது எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவு எப்போதும் இருக்கவில்லை, ஜனாதிபதி தேர்தலில் மாத்திரமே எங்களிற்கு அவர்களின் ஆதரவு கிடைத்தது.

தனிக்கட்சி என்ற வகையில் அவர்கள் பேச் வார்த்தைகளில் ஈடுபடலாம், முடிவெடுக்கலாம், அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்திருக்கலாம்



விரும்பினால் வெளியேறலாம் என குறிப் பிட்டுள்ள அமைச்சர் அதற்கு தடையேதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அந்த கட்சியை சேர்ந்த சிறிய எண்ணிக்கையிலானவர்களே பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளதால் அவர்கள் வெளியேறினாலும் அது அரசாங்கத்தின் கட்டமைப்பைப் பாதிக்காது என அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# கொழும்பு துறைமுக நகரில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகரத்தில் இளைஞர், யுவதிகளை தொழிலில் ஈடுபடுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்க திறன் மேம்பாட்டு தொழில் கல்வி இராஜாங்க அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதற்கான கலந்துரையாடல் ஒன்று இராஜாங்க அமைச்சர் சீத்தா அரபேபொல மற்றும் துறைமுக நகரத்திற்கு பொறுப்பாக உள்ள அதிகாரிகளுக்கு இடையில் இடம்பெற்றுள்ளது.

துறைமுக நகரத்தில் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் அவசியமான பயிற்சிகள் உரிய முறையில் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் குறிப் பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சின் நிறுவனங்கள் ஊடாக இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# மேலும் 26 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள்

(கொழும்பு)

கொரோனா வைரஸுக்கு எதிரான மேலும் 26 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தடுப்பூசிகளுடனான விமானம் கட்டாரிலிருந்து நேற்று திங்கட்கிழமை காலை 02.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன.

அதனடிப்படையில் இது வரை 52 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2352

### துருபதன்

மொதல்ல கடவுளோட அட்ரச கண்டுபுடிச்சு அவருக்கு ஒரு ஆண்ட்ராய்டு போனு வாங்கி கொடுத்துரனும்டா



அப்பத்தான் அவர் நம்ம வாழ்க்கையில விளையாடாம போனுல விளையாடிக்கிட்டு இருப்பார்.

### கேதீஸ்

எல்லா வசதிகளும் வாய்ப்பும் வந்த பிறகு மனம் தேடுவது பழைய சந்தோசமான வாழ்க்கையையே...



### தருணிகா

இந்த உலகத்துல ஒருத்தன கெட்டவன்னு சொல்ல வார்த்தை போதும்ஆனா நல்லவன்னு சொல்ல சாட்சி தேவைப்படுகிறது...



### ரவிக்குமார்

பொண்டாட்டி கூட அம்புட்டு உரிமையா தோளில் சாய மாட்டா...

பயபுள்ள இந்த பஸ்சுல பக்கத்துல உட்காருபவனுக இருக்கானுகளே...



### ஹம்சாயினி

என்ன மச்சான் கோயிலுக்கு போய்ட்டு சோகமா வர உன்னோட Ex ச பார்த்திய என்ன?

நான் போறதுக்குள்ள பிரசாதம் காலியாயிடுச்சு மச்சான்...



### வைதேகி

நமக்கு பிடிச்ச மாதிரி லைப் ஒருநாள் மாறும்... அப்ப ஒன்னு நமக்கு தலையில "நர" தள்ளியிருக்கும் இல்ல வாயில "நொர" தள்ளியிருக்கும்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி பறிபோவது குறித்து கவலைப்படமாட்டேன்

## உதய கம்மன்பில



(கொழும்பு)

எனது அமைச்சுப்பதவியை மீள பெற்றுக் கொள்ள அல்லது மாற்றியமைக்க ஜனாதிபதிக்கு பூரண அதிகாரம்இருக்கின்றது. அதுதொடர்பில் நான் கவலைப்படவில்லை.

ஏனெனில் அமைச்சு பதவியுடன் நான் அரசாங்கத்துக்கு வரவில்லை. நம்பிக்கையில்லா தீர்மானத்தில் வெற்றிபெறுமா இல்லையா என்பதை 20 ஆம் திகதி அறிந்து கொள்ளலாம் என வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பிரதமரின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதிக்கு எந்தவொரு அமைச்சுப் பதவியையும்மீள பெறவும் முடியும்.அதனை மாற்றியமைக்கவும் முடியும்.

அந்தவகையில் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அமைச்சுப்பதவியை என்னிடமிருந்து பெற்று வேறு யாருக்காவது வழங்குவதற்கு தீர்மானித்தால் அதற்கு நான் தயார்.

மேலும் எரிபொருட்களின் விலை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானிக்கவில்லை. நான் அமைச்சரவைக்கு தெரிவித்ததால் தான் விலை அதிகரிப்பு இடம்பெற்றதாக அரசாங்கத்தில் இருந்து யாரும் தெரிவித்ததாக எனக்கு தெரியாது.

அவ்வாறு யாரும்தெரிவித்திருந்தால், அது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் அரசாங்கத்தை நடத்துவது நான் அல்ல. மாறாக ஜனாதிபதியும் அமைச்சரவையுமாகும் என்றே இதுவரை நான் நினைத்துக்கொண்டிருக்கின்றேன்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்திஎனக்கு எதிராக கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு முகம் கொடுக்க நான் தயாராகவே இருக்கின்றேன். (நி-5)

# இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களை பாராளுமன்றத்திற்குள் அனுமதிப்பது தொடர்பான தங்களின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான விவகாரத்தில் தங்கள் ஆட்சேபனைகளை வெளிப்படுத்தியதாகவும் அந்த நிலைப்பாடு மாறாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச, பசில்ராஜபக்ஷவோ அல்லது வேறு எந்த உறுப்பினர்களோ பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பொருளாதார சவால்களை அவரால் சமாளிக்க முடியுமா என்று தமக்கு தெரியாது என்றும் அவரால் அவ்வாறு செய்ய முடிந்தால், அது இன்றியமையாததாக இருக்கும் என்றும் விமல் வீரவன்ச குறிப்பிட்டார். (நி-5)

# பெற்ற மகனை அடித்துக்கொன்ற பெற்றோர் கைது

(மகியங்கனை)

தாம் பெற்ற மகனையே பெற்றோர் அடித்து கொன்ற பரிதாப சம்பவமொன்று ஹசலகா என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நான்கு பேரை ஹசலகா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம்ஜூலை 6 ஆம் திகதி நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். பலியானவர், ஹசலகாவில் வசிக்கும் 27 வயதான சுனில் நிசங்கா, இரண்டு மகள்களின் தந்தை ஆவார்.

அவர் தனது குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் தனது பெற்றோரின் வீட்டின் பின்புறம் உள்ள ஒரு சிறிய அறையில் வசித்து வ்ந்தார், கூலி வேலை செய்வதன் மூலம் தனது குடும்பத்தை பராமரித்து வந்தார்.

குடும்ப தகராறு அதிகரித்ததால் தந்தையும் அவரது மைத்துனரும் தனது கணவரை தடிகளாலும் கைகளாலும் அடித்ததாக அவரது மனைவி பொலிஸாரிடம் தெரிவித்தார்.

இறந்தவரின் தாய், தந்தை, சகோதரி மற்றும் அவரது கணவர் ஆகியோரை ஹசலகா பொலிஸார் கைது செய்து ஜூலை 9 ம் திகதி மஹியங்கனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். அதனையடுத்து சந்தேக நபர்கள் ஜூலை 19 வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சனீஸ்வரன்

என்னுடைய நீண்ட கால நண்பர் ஒருத்தர்.

வருடம் தவறாமல் திருநள்ளாறு என்கின்ற திருத்தலத்திற்கு போயிட்டு வருவார்.

"அங்கே என்ன சேர் விசேஷம்?" என்று கேட்பேன்.

"என்ன இது இப்படி கேட்கிறீர்கள்? சனி பகவான் நளன் விருப்பப்படி அங்கே தானே எழுந்தருளியிருக்கிறார்.

அவரைப் போய் பார்த்து ஒரு கும்பிடு போட்டுட்டு வந்தால் நம்மைப் பிடித்திருக்கின்ற சனியெல்லாம் விலகும்!" என்பார்.

"சத்தம் போட்டுச் சொல்லாதீங்கள் சேர்.. வீட்டுலே வேறே யார் காதுலேயாவது இது விழுந்திடப் போவுது!" என்றார்.

நான் சொல்றதிலே உள்ள நியாயத்தைப் புரிஞ்சுக்கிட்டு அவரும் கொஞ்சம் எச்சரிக்கை உணர்வோட எனக்கு நன்றி சொல்வார் பார்வை மூலமாகவே.

அந்த நண்பருக்கு ஆன்மிக விஷயங்களிலே அதிக ஈடுபாடு. அப்பப்போது சில புராணக் கதைகளையெல்லாம் சொல்லுவார்.

ரொம்ப சுவாரஸ்யமா இருக்கும்.

எப்பவுமே புராண விஷயங்களையெல்லாம் அறிவியல் என்கிற தராசிலே வச்சு எடை போட்டுக் கொண்டிருக்கக்கூடாது. அப்படிப் பார்த்தா அதெல்லாம் நம்ப முடியாத கற்பனைகளாகத் தோணும்.

மூட நம்பிக்கைகளாகவும் தெரியும்! புராணங்களைப் புராணங்களாகவே புரிஞ்சிக்கிறவர்களுக்கு அதெல்லாம் அர்த்தமுள்ள செய்திகளை உள்ளடக்கியிருக்கிறது தெரியும். அந்த வகையிலேதான் இந்த நண்பரும் நிறைய செய்திகளைச் சொல்லுவார்.

"சனியைப் போல கொடுக்கிறவனும் இல்லை! சனியைப் போல கெடுக்கிறவனும் இல்லை! என்று சோதிடர்கள் சொல்லுவார்கள்.

நாம ஏதாவது ஒரு வம்புலே மாட்டிக்கிட்டா பிடிச்சது சனி!" என்கிறோம்.

"இராவணன்! எப்பேற்பட்ட வீரன். அவனே சனிப்பார்வை பட்டதும்தானே சங்கடப்பட ஆரம்பிச்சான்!" என்றார் நண்பர்.

அது எப்படிங்க? என்று கேட்டேன். அவர் சொல்ல ஆரம்பிச்சார்.

இராவணன் நவக்கிரகங்களையும் பிடிச்சுக் கொண்டுவந்து தன்னுடைய சிம்மாசனத்திலே படிகளாகப் போட்டு வச்சுட்டானாம்.

பாவம்! அந்த ஒன்பது தேவதைகளும் ஒவ்வொரு படியாக குப்புறக் கிடந்தாங்களாம்.

நவக்கிரகம் நம்மளை ஆட்டிப் படைக்குதுன்னு நாம சொல்லிக்கிட்டிருக்கோம்!

ஆனா அந்த நவக்கிரகங்களை ராவணன் எப்படி வச்சிருந்தான் பாருங்க! எல்லாரையும் சிம்மாசனத்துக்குப் பக்கத்திலே படிப்படியா போட்டு வச்சிருக்கான்.

வேறே வழி இல்லாமே எல்லாரும் குப்புற விழுந்து கிடக்கிறாங்க. இராவணன் ஒவ்வொரு தடவையும் இவங்க முதுகிலே அடிவச்சி ஏறித்தான் அந்த சிம்ம்ாசனத்திற்குப் போறது வழக்கம்.

இப்படி நடந்துக்கிட்டிருக்கிறது நாரதர் கண்ணுலே பட்டுட்டுது சும்மா இருப்பாரா?

யோசித்தார்....என்ன செய்யலாம்-ன்னு! ஒரு முடிவு பண்ணிக்கிட்டு நேரா இராவணன் கிட்டே போனார்.

"இராவணா? நீ நவக்கிரகங்களை பிடிச்சி கொண்டுவந்து உன் சிம்மாசனத்துக்குப் படிகளாகப் போட்டு வச்சிருக்கிறே... அது உன்னுடைய வீரத்தைக் காட்டுது! இருந்தாலும் ஒரு விடயத்தை நீ யோசித்து பார்க்கணும்.

ஒவ்வொரு தடவை நீ சிம்மாசனத்துக்குப் போகும்போதும் நவக்கிரகங்களின் முதுகிலே அடிவச்சு நீ ஏறிப்போகிறாய்! அது உனக்குப் பெருமை இல்லை! அவர்களோட மார்பிலே அடிவச்சி ஏறிப்போகணும்.... அதுதான் உனக்குப் பெருமை !" என்றார்.

'இவர் சொல்றதும் சரிதானே!' - என்று யோசித்தான் இராவணன்.

உடனே குப்புறக் கிடந்த நவக்கிரகங்களைத் திருப்பி மல்லாக்கப் போட்டான். அவர்கள் மார்பிலே அடிவைத்து மேலே ஏறி சிம்மாசனத்துக்குப் போனான்.

அப்படிப் போகும்போது - சனி பகவானின் பார்வை அவன் மேலே பட்டது... அவ்வளவுதான் சூர்ப்பனகை தேடி வந்தாள். சீதையோட அழகைப் பத்தி தன் அண்ணனிடம் சொல்ல ஆரம்பிச்சாள்.

விவகாரம் ஆரம்பமாயிட்டுது! என்று இந்தக் கதையை சொல்லி முடிச்சார் என்னுடைய நண்பர்.

"ஆக சனியின் பார்வை நம் மேலே படாமல் பார்த்துக்கிறது நல்லது- என்கிறீங்க?" என்றேன்.

"ஆமாம் சேர்! இப்ப கூட நான் உங்க வீட்டுக்கு வந்திருக்கிறது ஒருத்தருடைய பார்வை என் மேலே படக்கூடாது என்கிறதற்காகத்தான் " என்றார்.

"யார் சேர் அவர்?" என்றேன்.

"என்னுடைய மாமனார் சேர் .. அவசரத்துக்கு அவருக்கிட்டே கொஞ்சம் கடன் வாங்கி விட்டேன்... நம்ம மாப்பிள்ளைதானேன்னு அதை விட்டுக் கொடுக்கறதுக்கும் அவர் தயாரா இல்லை!

இன்றைக்கு இப்ப அவர் எங்க வீட்டுக்கு வரக்கூடிய நேரம். அதுதான் அவர் பார்வையிலே படாமே தப்பிக்கலாம்ன்னு இங்கே வந்துட்டேன்!" என்றார்.

"பார்வை படனும்ன்னு இருந்தா பட்டுத்தான் தீரும்போல இருக்கு!" என்றேன் நான்.

"என்ன சொல்லுறீங்க?" என்றார் ஒண்ணும் புரியாமே!

"நீங்க இங்கே தான் வருவீங்கன்னு அவருக்குத் தெரியும் போல இருக்கு... அதனால உங்களுக்கு முன்னாடியே உங்க மாமனார் [illegible] வந்துட்டார். அந்த பீரோவுக்குப் பின்னாடிதான் மறைஞ்சு நின்னுக்[illegible]கார்!" என்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

25

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



மற்றொரு உதாரணமாக பின்வரும் சூழ்நிலையைக் கருதுவோமானால் சுரங்கப்பாதை, தாதுக்களை அகற்றுவது (**mining and disposition of minerals**) போன்றவற்றைகையாள மாகாண சபைப் பட்டியலில் உள்ள விடயங்களில் மாகாண சபைக்கு சட்டம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இது ஒதுக்கப்பட்ட பட்டியலின் கீழ் (கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்) அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரம் ஆகும். எனவே, இத்தகைய ஏற்பாடுகளை மத்திய அரசாங்கமும் மற்றும் சட்டமா அதிபரும் எதிர்ப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை. மேலும் இது போன்ற வாய்ப்பைப் பயன்படுத்தி மத்திய அரச நிர்வாகம் மாகாண சபைகளை வழி நடத்தப் பார்க்கலாம்.

1989 ஆம் ஆண்டில் மாகாண சபைகளால் காணி சம்பந்தமான நியதிச்சட்டங்களை இயற்றுவதற்கு (ஒருவரைபுச்சட்டத்தை மாகாண மற்றும் மத்திய அரசுகள் பகிர்ந்து கொள்வதன் மூலமும்) இருந்த சூழ்நிலை அரசியல் முடிவுகளின் காரணமாக 1995 ஆம் ஆண்டில் தனது போக்கை மாற்றி அதன் பின்னர் மாகாண சபைகள் நிறைவேற்றிய நியதிச் சட்டங்களை அமுல்படுத்துவதை மத்திய அரசு தடுத்தது.

**காணி அதிகாரம் படிப்படியாக மாகாண சபைகளிடமிருந்து பறிக்கப்பட்டன. முதலாவதாக, மத்திய அரசாங்கம் காணி ஆணையாளர்கள் திணைக்களத்திலிருந்து உதவி அல்லது பிரதி காணி ஆணையாளர்களை அனைத்து மாகாண சபைகளுக்கும் மாகாண காணி ஆணையாளர்களாக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இரண்டாவதாக, ஒரே நேரத்தில் மாகாண காணி ஆணையாளர்கள் மேலதிக காணி ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டனர். மூன்றாவதாக, காணி ஆணையாளர், மாகாண காணி ஆணையாளர்களுக்கான சுவ்பங்களை வைக்கத்தொடங்கினார், அங்கு காணி அதிகாரப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. நான்காவதாக, அதிகாரப் பரிமாற்றச் சட்டத்தின் (Transfer of Powers Act) மூலம் பிரதேச செயலாளர்கள் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டதோடு மத்திய அரசின் பிரதேசத் தலைவர்களாகவும் உருவாக்கப்பட்டார்கள்.**

19) நான் மாகாண சபைகளின் செயலாளராக இருந்த போது, 1993 ஆம் ஆண்டின் இறுதியில் இதே போன்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்போதைய காணி அமைச்சர் போல் பெரேராவின் அறிவுறுத்தலின் பேரில், காணி சம்பந்தமாக ஏற்கனவே விளக்கப்பட்ட அரசியலமைப்பு விதிகளை மீண்டும் வலியுறுத்தி காணி அமைச்சின் செயலாளரால் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (**Circular 2/1993 of November 20th 1993 issued by Secretary Lands (File L/08/27)** எதிர்க்கட்சியைச் சேர்ந்த தென் மாகாணசபை முதல்வர் அமரசிறி தொடங்கொட அரசகாணிகளைப் பராதீனப்படுத்த முயன்ற போது ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளின் பேரில் காணிகள் பராதீனப்படுத்த நான் மறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பிற்காலத்தில் மாகாண ஆளுநர்கள்கூட உள்துறை அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுகளால் இது சம்பந்தமாக எச்சரிக்கை செய்யப்பட்டனர். (**Letter issued by Secretary Ministry of Home Affairs, Provincial Councils and Local Government dated December 3rd 2002, numbered PL/6/1/64/10).** இந்த அனுபவங்கள் அரச காணிகளை பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று அரசாங்கங்கள் எவ்வாறு அழுத்தம் கொடுக்க முடியும் என்பதை கற்பித்தன.

## 13 ஆவது திருத்தத்தின்படி தேசிய காணிக் கொள்கையின் தேவை

அரச காணி குறித்த தேசிய கொள்கை குறிப்பாக 13 ஆம் திருத்தத்தின் பின்னிணைப்பு II பிரிவு 3:1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் மாகாண சபைகள் செயற்படுத்துவது சம்பந்தமாக அதன்பிரிவு 3:4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது காணி ஆணையாளர்கள் நாயகம் அல்லது காணி அமைச்சின் செயலாளர் அல்லது ஜனாதிபதியின் செயலாளர் காணிக் கொள்கைகள் சம்பந்தமாக மத்திய அரசு, மாகாண சபைகள் அல்லது அரச காணியுடன் சம்பந்தப்பட்ட பிற அரச நிறுவனங்களால் பின்பற்றப் படுவதற்கான வழிகாட்டுதல்கள் என்னவாக இருக்க வேண்டும் என்று அறிவித்து வருகின்றனர். அரசியலமைப்பு மூலம் மேற்கூறப்பட்ட வேலையைச் செய்ய தேசிய காணி ஆணைக்குழு நிறுவனம் இருந்த போதிலும், தேசிய காணி ஆணைக்குழுவை நிறுவுவதற்கு ஒரு சட்டத்தை உருவாக்க அரசு எந்த முயற்சியும் எடுக்காத போது, அது எவ்வாறு செயற்பட முடியும்? இத்தகைய வெற்றிடம் ஒன்று இருக்கும் போது இந்த விதத்தில் செயற்படுவதை அதிகாரிகள் எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? இது வேண்டுமென்றே அரசியலமைப்பு அதிகாரத்தை அபகரிப்பதாகவும், இதனால் அரசியலமைப்பை மீறுவதாகவும் ஒருவர் வாதிட்டால், அது தண்ணீரை கையால் பிடிப்பது போன்றதாகும்.

இச் செயல் முறையை தொடர்ந்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. முன்னர் கூறியது போல மாகாண சபைச் சட்டம் இயற்றப்பட்ட பின்னரே அரசியல் மற்றும் நேர்மறையான அதிகாரத்துவ தலையீடுகள் தோன்றியுள்ளன. 1989 ஆம் ஆண்டில் ஜனாதிபதி பதவி மாற்றப்பட்ட உடனேயே அதிகாரப்பரவலாக அர்ப்பணிப்பு குறைந்து, அனைத்து திணைக்கள (நிறுவன) ஏற்பாடுகளும் மையப்படுத்தப்படுவதை நோக்கி இயக்கப்பட்டன, அதிகாரப் பகிர்வின் நல்ல செயல்திறனைப் பாதித்தன, காணி அதன் ஒரு பகுதியாக பெரிதும் பாதிக்கப்பட்டது.

அடுத்தடுத்து வந்த அனைத்து அரசாங்கங்களால் அதிகாரப் பகிர்வுக்கு எதிராக செயற்படுத்திய எதிர்மறையான அணுகுமுறைகள் பல இருந்தன என்பதை நிரூபிக்க அந்தந்த அரசாங்கங்கள் எடுத்த நடவடிக்கைகளில் சில வற்றை நாம் பட்டியலிடலாம்.

1) மாகாண சபைகளில் இருந்து மையத்திற்கு உதவி அரச அதிபர்களை (தற்போதைய பிரதேச செயலாளர்கள்) திரும்பப் பெறுதல், மையத்திற்கு பொறுப்பான பிரதேச செயலகங்களை உருவாக்குதல் மற்றும் காணிப் பிரச்சினைகளை கையாள அவர்களை அனுமதித்தல், மையத்திற்கு உண்மையுள்ள மாகாண காணி ஆணையர்களை நியமித்தல் போன்றவை. (இது ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ காலத்தில் நடந்தது.)

2) மாகாண சபைகளிடமிருந்து கிராம நில தாரிகளைத் (கிராம சேவகர்களை) திரும்பப் பெறுதல் (இது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் காலத்தில் நடந்தது.)

3) மையத்தில் உள்ள மாகாணசபைகளின் அமைச்சின் பிரதிநிதி இல்லாமல் மத்திய அரசாங்க பிரதிநிதிகளை மட்டுமே உள்ளடக்கிய காணிக்கொள்கை பிரச்சினைகளை முடிவு செய்ய குழுக்களை நியமித்தல் (இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கத்தின் காலத்தில் நடந்தது.)


4) மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசின் திணைக்களங்கள் போன்றவற்றுக்கான உத்தரவுகள், வழிகாட்டுதல்கள் மற்றும் பின்பற்றுதல் குறிப்புகளை ஜனாதிபதி செயலகங்களால் வழங்குதல். ( இது ஜனாதிபதிகள் டி.பி. விஜேதுங்கா, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலங்களில் நடந்தவை)

5) காணி அமைச்சின் கட்டளைகள் மூலம் காணிப்பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் காணிப் பயன்பாட்டு கொள்கையைச் சார்ந்த வர்த்தமானி அறிவித்தல்ளை வெளியிட்டது. (**Gazette Extraordinary Notification 1654/21 of May 20th 2010**). இச் செய்கை அரசியலமைப்பால் வழங்கப்பட்ட காணி தேசிய ஆணைக்குழுவின் அதிகாரங்களில் ஒரு பகுதியை, பின்னிணைப்பு II இன் உறுப்புரை 3.2 இனை ஆக்கிரமிக்கிறது.

(இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் நடந்தது) (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார விதிமுறைகளை மீறினால் ஆறு மாதங்கள் சிறைத்தண்டனை




(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 190 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 49 ஆயிரத்து 449 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் சுமார் 41 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.


இந்தக் குற்றச்சாட்டில் குற்றவாளியாகும் நபரொருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் அபராதமும், 6 மாத சிறைத் தண்டனையும் நீதிமன்றினால் விதிக்க முடியும் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### தீர்க்க சுமங்கலி வரம் அருளும் காரடையாள் நோன்பு



இதைக்கேட்டு வெலவெலத்துப் போன எமன், அவசரத்தில் சிந்திக்காமல் கொடுத்த வரத்தின் விபரீதத்தை உணர்ந்தார். பின்னர் சாவித்திரியின் சமயோசிதத்தை பாராட்டி, சத்தியவானின் உயிரை திருப்பி கொடுத்து வாழ்த்தினார். காரடையான் நோன்பு அன்று சாவித்திரியின் கதையை கேட்பவர்களுக்கு தீர்க்காயுசு கிடைப்பதாக ஐதீகம்.

**விரதம் இருக்கும் முறை**

காரடையான்நோன்பன்று வீட்டை தூய்மை செய்து மாக்கோலமிட வேண்டும். வாசல் நிலை, சுவாமி அறை நிலைகளில் மாவிலை தோரணம் கட்ட வேண்டும். பூஜை அறையை சுத்தம் செய்து கோலமிட்டு, காமாட்சி அம்மன் மற்றும் சுவாமி படங்களுக்கு பூமாலை சூட்ட வேண்டும்.

ஒரு கலசத்தின் மேல், தேங்காய், மாவிலை வைக்க வேண்டும். கலசத்தில் குங்குமம், மஞ்சள் பூசி, அதன் மேல் மஞ்சள் கயிறை கட்ட வேண்டும். அருகில் காமாட்சி அம்மன் படம் வைத்து, அவளை சாவித்திரியாக கருதி வழிபட வேண்டும். சாவித்திரி காட்டில் தன் கணவன் சத்தியவானுடன் வாழ்ந்த போது, அங்கு கிடைத்த செந்நெல்லையும், காராமணியையும் கொண்டு அடை தயார் செய்து, வெண்ணெயுடன் அன்னைக்கு சமர்ப்பித்து வழிபட்டாள். அதனால் சிறிது வெண்ணெயுடன், விளைந்த நெல்லைக் குத்தி கிடைத்த அரிசி மாவில் அடை தயாரித்து நைவேத்தியமாக படைக்க வேண்டும்.

நுனி வாழை இலையில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், வாழைப்பழம், தேங்காய் உள்ளிட்ட பொருட்களை ஒரு தட்டில் வைக்க வேண்டும். மஞ்சள் சரடு (மஞ்சள், பூ இதழும் நடுவில் கட்டி) இவைகளை வைத்து இலை நடுவில் வெல்ல அடையும், வெண்ணெயும் வைக்க வேண்டும். நோன்பு சரடை அம்மனுக்கு சாற்றி துளசியை ஒன்று கட்டி தங்கள் கழுத்தில் கட்டிக் கொள்ள வேண்டும்.

**'உருகாத வெண்ணெயும், ஓரடையும்**
**வைத்து நோன்பு நோற்றேன்**
**ஒரு நாளும் என் கணவன் என்னைப்**
**பிரியாமல் இருக்க வேண்டும்'**


என்று ஒவ்வொரு சுமங்கலி பெண்ணும் அம்மனிடம் விண்ணப்பித்து வேண்டிக் கொள்ள வேண்டும். மூத்த பெண்கள் இளைய பெண்களுக்கு சரடு கட்ட வேண்டும்.

பிறகு தானும் கட்டிக் கொண்டு, அம்மனை வணங்கிய பின்னர் அடையை சாப்பிடலாம். நோன்பு தொடங்கியது முதல், முடிக்கும் வரை தீபம் எரிய வேண்டியது முக்கியமானது. அன்று பாலும், பழமும் சாப்பிடுவது மாங்கல்ய பலத்தை பெருக்கும். நிவேதனப் பொருட்களை உண்டு விரதத்தை முடிக்க வேண்டும். மறுநாள் சூரிய உதயத்திற்கு முன், பசுவிற்கு இரண்டு வெல்ல அடைகள் கொடுக்க வேண்டும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## வாகன விபத்தில் இருவர் காயம்



(ஹற்றன்)

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை றொசிட்டா பண்ணைக்கு அருகாமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

கொட்டகலை நகரிலிருந்து லொக்கீல் நோக்கி பயணிப்பதற்கு தயாரான வான் ஒன்று, கட்டுப்பாட்டை இழந்து, மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியுள்ளது. இதனையடுத்து, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5)

## பொறியில் சிக்கி சிறுத்தை உயிரிழப்பு

(கொழும்பு)

ஹசலக மஹகல இன்ன பகுதியில் பொறியில் சிக்கிய சிறுத்தையொன்று நேற்று முன்தினம் உயிரிழந்தது. பிரதேசவாசிகள் இது குறித்து ஹசலக வனவிலங்குகள் பாதுகாப்பு அலுவலகத்துக்கு தகவல் கொடுத்தனர்.

வனவிலங்கு அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகை தந்த போதிலும் கால்நடை வைத்தியர் ஒருவர் அவ்விடத்துக்கு வருகைதராதமையால் சிறுத்தையை பொறியிலிருந்து விடுவிக்க மேலும் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் தாமதமானதாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 140 | 160 | 160 | 200 |
| கரட் | 180 | 170 | 180 | 200 |
| பூசணி | 100 | 100 | 60 | 100 |
| புடோல் | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 280 | 220 | 300 | 480 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 180 | 160 |
| பயற்றங்காய் | 150 | 140 | 180 | 120 |
| லீக்ஸ் | 200 | 170 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 280 | 200 | 220 | 280 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 250 | 350 |
| போஞ்சி | 160 | 160 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 120 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 50-70 |
| இராசவள்ளி | 250 | -- | 250 | -- |
| வெங்காயப்பூ | 260 | 220 | 250 | 300 |
| முள்ளங்கி | 80 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேவதையின் தீர்ப்பு

"ஒண்ணும் கிடை யாது. நான்தான்இவனை விட அறிவாளி" என்று சீதா சொல்ல, ரவி மறு க்க, சூடான விவாதம் மீண்டும் தொடங்கி யது.

இதைக்கண்டதேவதை வருந்தியது. ஒரு கணம் யோசித்தது."சரி, சரி... உங்கள்சண்டையைசற்று நிறுத்துங்கள். இதற்கு நான் ஒரு வழி செய் கி றேன்" என்று கூறியது.


"உங்கள் இருவருக் கும் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெற்றி பெறுகி றீர்களோ, அவர்தான் அறிவில் சிறந்தவர்" என்று கூறி, "உங்களு க்கு இதில் சம்மதமா?" என்று கேட்டது.

ரவியும் சீதாவும் "சம் மதம்' எனத் தலையாட் டினர்.

உடனேபோட்டி என்ன என்பதை தேவதை அவ ர்களிடம் சொல்ல ஆர ம்பித்தது. "நான் உங்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு குடுவை தருகிறேன்.

இது பனிக்காலம் அல் லவா? அந்தக் குடுவை யில் இரவு முழுவதும் பனித்துளிகளைச் சேமி க்க வேண்டும். இருவ ரில் யார் அதிகம் சேமி க்கிறீர்களோ அவர்தான் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்" என்று கூறியது.

"ஆனால் ஒரு நிபந்த னை. இத் தருணத்திலிரு ந்து போட்டி முடியும் வரை நீங்கள் ஒருவருக் கொருவர் பார்த்துக் கொள்ளவோ பேசிக்



கொள்ளவோ கூடாது.

நான் நாளை மாலை தான் மீண்டும் வரு வேன். இதே மைதானத் தில் எனக்காகக் காத் திருங்கள்" என்று கூறி, மூடியில்லாத இரு குடு வைகளை அவர்களிடம் கொடுத்துவிட்டு மறை ந்தது.

இருவரும் குடுவை யு டன் அவரவர் வீடுகளுக் குச் சென்றனர். செங்க திர் சூரியன் மறைந்து, பால் ஒளி வீசும் இரவு ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் பனியும் கொட்ட ஆரம்பித்தது.

ரவி குடுவையை எடு த்துக்கொண்டு தோட் டத் துக்கு வந்தான். திறந்த வெளியில் வைத் தான்.

(தொடரும்)

# மகாபாரதம்




**தருமரின் துயரம்**

போர்க்களத்தில் ஏற் பட்ட உயிர்ச் சேதங் களை எண்ணி தருமர் சோகமாகக் காணப் பட் டார். சகோதரர்களை யும், சுற்றத்தாரையும் இழந்து பெற்ற பயன் என்ன என ஏங்கினார். அருச்சுனனைக் கூப்பி ட்டு தருமர் சொல்ல ஆரம்பித்தார்.

"நாம் காட்டிலேயே இருந்திருந்தால் துயரம் இருந்திருக்காது. நம் சகோதரர்களைக் கொன் றதால் என்ன நன்மை. வனத்தில்இருந்த போது நம்மிடம் பொறுமை இருந்தது. அடக்கம் இருந்தது, அஹிம்சை இருந்தது. இவையே தருமம்.

அறிவின்மையாலும், ஆணவத் தினாலும், பொருளாசையாலும் அரசாட்சியில் உள்ள கஷ்டத்தை விரும்பி துய ரத்தை அடைந்தோம்.

எல்லோரையும்கொன்று விட்டு கேவலமாக உயிர் வாழ்ந்து கொண் டிருக்கிறோம். நம்மால் கொல்லப்பட்டவர்கள் மரணம் என்னும் வாயி லில் புகுந்து யமனின் மாளிகையை அடைந்து விட்டார்கள்.

நன்மைகளை விரு ம்பும் தந்தைகள் அறிவு ள்ள மக்களைப் பெற விரும்புகின்றனர். தாய் மார்கள் விரதங்களும், தெய்வ வழிபாடுகளி லும் ஈடுபடுகின்றனர். மகனையோ, மக ளையோ பெற்று அவர் கள் நல்லபடியாக கௌர வத்துடனும்,. செயல் திறனுடனும் புகழுடன் வாழ்வார்களாயின் தம க்கு இம்மையிலும், மறுமையிலும் நற் பேறு கிட்டும்என பெற்றோர் எண்ணுகின்றனர்.

இங்கே அவர்கள் நனவு கனவாயிற்று. அவர்கள் வாழ்க்கையும் பாலைவனம் போல் ஆயிற்று. அவர்களின் பிள்ளைகள் நம்மால் கொல்லப்பட்டார்கள்.

அவர்கள் தாய் தந் தையர்க்கு ஆற்ற வேண் டிய கடமை நம்மால் தடுக்கப்பட்டது. ஆசை யும், சினமும் மிக்கவர் கள் வெற்றியின் பயனை அடைய முடியாது.

இதில் கௌரவர்க ளும் நாமும் ஒன்று தான்.இந்த பூமியின் பயனை அவர்களால் அனுபவிக்க முடியவி ல்லை. ஆசைவயப் ப ட்ட நம்மால் மட்டும் இதன் பயனை அனுப விக்க முடியுமா? எண் ணிப்பார்த்தால் துரி யோதனனால் அலைக் கழிக்கப்பட்ட நாமே இந்த உலகின் அழிவுக் கும் காரணமானோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

துஷ்டனையும், தங்கத்தையும், பேரிகையையும், முரட்டுக் குதிரையையும், கருப்பங்கழியையும், எள்ளையும் நற்குண விருத்தி கருதி அடிக்க வேண்டும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீட்டுத் திட்டத்தில் பாவம் உழைத்து விடாதீர்கள்

பந்தி பரிமாறல் என்பது நம் தமிழர் பண்பாட்டில் மிக முக்கியமான நிகழ்வு.

பந்திப்பாய் விரித்து, தலைவாழையிலை போட்டு தண்ணீர் தெளித்து மூன்று முறை அன்னம் வைக்க; அதனைத் தொடர்ந்து ஒரு சீரொழுங்கில் கறிகள் பரிமாறப்படும்.

பருப்புக் கறி வைத்ததும் இனி சோற்றை உண்ணலாம் என்ற செய்தி குறியீட்டு அடையாளமாக அமையும்.

இதற்கு முன்னதாக, பந்தியில் அமர வைப்பதற்காக செம்பும் தண்ணீரும் கொடுக்கின்ற நடைமுறை எல்லாவற்றையும்விட முக்கியமானது.

செம்பும் தண்ணீரும் எனக்கு முதலில் தரவில்லை என்பதற்காக இந்தச் சபையில் கை நனைக்க மாட்டேன் என்று உண்ணாமல் வெளியேறுகின்ற சம்பவங்களுக்கும் குறைவில்லை.

இப்போதெல்லாம் இந்த நடைமுறைக்கு ஏது இடம்.

தாலி ஏறியதும் தட்டேந்தி நின்று; தானே தனக்குச் சோறும் கறியும் எடுத்து, தானே இருக்கும் இடம் தேடி இருந்து, உண்டுவிட்டு கைகழுவிச் செல்கின்ற கலாசாரத்தில் பந்தி பரிமாறல் என்பது பரலோகம் போன கதையாயிற்று.

ஆனாலும் பந்தி பரிமாறும்போது முகம் பார்க்காமல் ஆசனம் பார்த்து அன்னம் வைக்க வேண்டுமென்பது நம் தமிழ் மொழி கூறி நிற்கும் அறவழிச் சிந்தனையாம்.

ஆம், பந்தி பரிமாறுகின்றபோது இவர் நம்மவர், அவர் என் எதிரி, இவரை யாரென்றே தெரியாது; என்ற மனநிலையில் இருந்து கொண்டு அன்னம் வைக்கக்கூடாது என்பதால், முகம் பாராமல் ஆசனம் பார்த்து அன்னம் பரிமாற வேண்டுமென்ற உயரிய கருத்து அமுல்படுத்தப்பட்டது.

இதற்குள் இருக்கக்கூடிய தத்துவம் முகமன் பார்க்கக்கூடாது. செல்வாக்குச் செலுத்தலாகாது. அவர் உயர்ந்தவர் இவர் தாழ்ந்தவர் என்ற பேதமை இருக்கலாகாது.

இதற்காகவே முகம் பாராமல் இலை பார்த்து போசனம் பரிமாறுதல் என்ற வழக்கு நடைமுறையாயிற்று.

அன்னம் பரிமாறுகின்ற விடயத்திலேயே இந்தளவு தூரம் நியாயத்துவம் பாதுகாக்கப்படுகின்றதெனில், ஏனைய காரியங்களில் எந்தளவு தூரம் நீதி, நியாயம், நேர்மை என்பவை பின்பற்ற வேண்டும் என்பதை நம் மூத்த தமிழ்க்குடி உயர் அறமாக எடுத்துரைத்துள்ளது.

இந்த வகையில், வீட்டுத் திட்டம் என்ற நல்லதொரு கைங்கரியத்தில் உச்சமான நியாயத்துவம் பின்பற்றப்பட்டு உரியவர்களுக்கு வீடுகள் கிடைப்பதை நம் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

முகமன் பார்த்தும் செல்வாக்குச் செலுத்தியும் வீடு வழங்கினால் வீடு கிடைக்க வேண்டியவருக்கு வீடு கிடைக்காமல் போகும் என்பதால் இச்செயல் மிகப் பெரும் பாவச் செயலாகும்.

எனவே யாருக்கு முதலில் வீட்டுத்திட்டம் கிடைக்க வேண்டும் என்பதை நியாயத்துவத்துடன் ஆய்ந்தறிந்து அவர்களுக்கு வீடுகிடைக்க வழிசமைத்தால், அதைவிட்ட புண்ணியம் வேறுஎதுவுமாக இருக்க மாட்டா.

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கை இழக்கும் அபாயம் இல்லை

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இழக்கும் அபாயம் இல்லை என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அரசாங்கத்தையும் இராணுவ வீரர்களையும் காட்டிக்கொடுக்க முயன்றவர்களே இவ்வாறு அவதூறு பரப்பி வருவதாகவும் கூறினார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார். (ம-3)

### ஜனாதிபதியின் வேண்டுகோளின்பேரில்

## விமல், உதய கம்மன்பில பசிலுடன் திடீர் சந்திப்பு

(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்சவிற்கும் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கும் இடையில் திடீர் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த சந்திப்பானது ஜனாதிபதியின் வேண்டுகோளின்பேரில் வார இறுதியில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக அரசியல் தரப்பு வட்டாரங்களை சுட்டிக்காட்டி ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த செய்தியில் மேலும், இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாகவும் சுமுகமாகவும் இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்திப்பில் வைத்து அமைச்சர் பசில் ராஜபக்ச, எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்பினை அரசாங்கம் எதிர்கொண்டுள்ளதால் அனைத்து அமைச்சர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கத்திற்குள் காணப்படும் நெருக்கடிகள் குறித்து ஆராய வேண்டும், கலந்துரையாட வேண்டும். அத்துடன் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நிதியமைச்சர் தெரிவித்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 14ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** டயலொக் கோபுரம் குமுழமுனை, குமாரபுரம், குமுழமுனை, முறிப்பு சந்தி, பளப்பாணி- முறிப்பு, பூதன்வயல், தண்ணிமுறிப்பு, குமுழமுனை பாடசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை குமுழமுனை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** எல்லப்பர் மருதங்குளம், தரணிகுளம், வைரவப்புளியங்குளம் ஆதிவிநாயகர் கோவிலடி, அறுகம்புல்வெளி, பாரதிபுரம், செக்கட்டிப்புலவு வீட்டுத்திட்டம், பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரியடி, தொழில் பேட்டை பூந்தோட்டம், குருமன்காடு பிள்ளையார் கோவிலடி, காத்தார் சின்னக்குளம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், குகன் நகர், குழுமாட்டுச் சந்தி, குருமன்காடு, குருமன்காடு கோவில் வீதி, மகாறம்பைக்குளம், மறக்காறம்பளை- கணேசபுரம், நாகரிலுப்பைக் குளம், நெளுக்குளம் சந்தி, நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பட்டைகாடு, வேப்பங்குளம் 6ஆவது வீதி, பட்டாணிச்சூர் புளியங்குளம், பம்பைமடு, பாண்சின்னகுளம், பெரிய காடு, பெரியார்குளம் பூந்தோட்டம், பொன்னாவரசங்குளம், பூந்தோட்டம், புளிதறித்த புளியங்குளம் வீட்டுத்திட்டம், புளி தறித்த புளியங்குளம் பழைய கிராமம், புதிய கோவில் குளம், இராஜேந்திர குளம், சாம்பல்தோட்டம், சாம்பல்தோட்டம் வீட்டுத்திட்டம், வைரவ புளியங்குளம், விநாயகபுரம் வீட்டுத்திட்டம், வைரவபுளியங்குளம், அரசன் அரிசி ஆலை, வேப்பங்குளம், சியாம் அரிசி ஆலை (சிவா அரிசி ஆலை), அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, நெளுங்குளம் நீர்வழங்கல் சபை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், தொழில்நுட்பக் கல்லூரி, தெய்வேந்திரம் அரிசி ஆலை, யு.என்.எச்.சி. ஆர். குருமன்காடு ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## மதங்களின் ஒரே குறிக்கோள்

❖ ஒழுக்கம் உள்ளவராக இருங்கள். தைரியத்தை மனதில் நிலை நிறுத்துங்கள். இதயப்பூர்வமான அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

❖ கோழை பாவம் செய்கிறான். தைரியசாலி மனதால் கூட பாவம் செய்வதில்லை.

❖ நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவி செய்வது தான்.

❖ அனைத்து மத வழிபாட்டின் ஒட்டுமொத்த சாராம்சம் என்பது தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வது மட்டும் தான்.

❖ பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே ஆன்மிகம்.

❖ சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர கடவுளுக்கும் சாத்தானுக்கும் வேறுபாடில்லை.

❖ நல்லொழுக்கம் ஒருவனை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செ[illegible]. தீயொழுக்கமோ கீழ்நிலைக்கு இழுத்துச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் வேண்டாம்

## ஜனாதிபதி வலியுறுத்தல்

(கொழும்பு)

**எந்தவொரு நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தையும் நிர்மாணிக்க இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கை மின்சார சபை, மின்சக்தி அமைச்சு, சூரிய சக்தி மற்றும் நீர் மின் உற்பத்தி இராஜாங்க அமைச்சின் மாதாந்த மீளாய்வுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளதாக நேற்று முன்தினம் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மீள் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியில் இலங்கை பிரவேசிக்க வேண்டும் என தாம் வாக்குறுதி அளித்துள்ளதால், உலகத்தின் முன்னிலையில் நகைப்புக்குரியவராகும் தேவை தமக்கு இல்லை என குறித்த கூட்டத்தில் ஜனாதிபதி வலியுறுத்தியதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அந்த தீர்மானத்துடன் நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் உத்தேச 300 மெகாவாட் மின் உற்பத்திற்கான நான்காம் கட்ட நிர்மாணப் பணிகள் செயற்றிட்டம் கேள்விக்குறியாகியுள்ளது.



குறித்த நான்காம் மின் உற்பத்தி நிலைய நிர்மாண ஒப்பந்தம் கேள்வி மனு கோரலின்றியே சீன நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டது.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் 70 வீதத்தை மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தமது இலக்கிற்கு அமைவாக செயற்படுமாறு மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி-5)

# மின்நிலையத்தின் பங்குகள் அமெரிக்காவிற்கு உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கை திறைசேரிக்கு சொந்தமான 300 மெகாவாட் உற்பத்தியை மேற்கொள்ள கூடிய கெரவலபிட்டிய "யுகதானவி" மின் நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்யும் உடன்படிக்கையில் இலங்கையின் நிதி அமைச்சு கைச்சாத்திட்டுள்ளது.

முன்னதாக இந்த மின் நிலையத்தின் 51 சதவீதத் திற்கு பங்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும் 40 வீதப்பங்குகளை விற்பனை செய்யும் உடன்படிக்கையே கையெழுத்தாகியுள்ளதாக தெரியவருகிறது. இந்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டமையை அமெரிக்க நிறுவனமும் உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை இந்த உடன்படிக்கை இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் என்று கூறி, இலங்கை மின்சார சபை பொறியாளர்கள் சங்கம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தடுப்பூசி முன்பதிவு செய்ய இணையத்தளம் அறிமுகம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் கொவிட்-19 தடுப்பூசி பெறுவதற்கான முன்பதிவுகளை இணையத்தளத்தின் ஊடாக செய்து கொள்வதற்கான வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

https://vaccine.covid19.gov.lk என்ற இணையத்தளம் வழியாக பொதுமக்கள் தடுப்பூசி பெற வசதியான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள் ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பொருளாதாரத்தில் பின்னடைவு இருந்தாலும் கல்விக்கு தடை ஏற்படாது- கெஹலிய

(கொழும்பு)

பொருளாதாரத்தில் பின்னடைவுகள் இருந்தாலும் சிறுவர்களின் எதிர்காலத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், கொரோனாத் தொற்றினால் கடந்த சில மாதங்களாக அரசாங்கம் 286 பில்லியன் ரூபாயினை செலவிட்டுள்ளது

சுற்றுலாத்துறையிலிருந்து 4 முதல் 5 பில்லியன் ரூபாய் வரையும் ஆடைத் துறையிலிருந்து 1.7 பில்லியனும் என அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் தங்களது பரீட்சை மற்றும் தங்களின் எதிர்காலம் குறித்து மாணவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இந்த சுமைகள் அனைத்தும், சிறுவர்களின் கல்விக்கு தடையாக இருக்க அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (நி-5)

# தடுப்பூசி பெற்றவர்களுக்கு சர்வதேச அங்கீகார இலத்திரனியல் அட்டை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்ற அனைத்து இலங்கையர்களுக்கும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட, தடுப்பூசி டிஜிட்டல் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அமைச்சர் எனும் வகையில் நாமல் ராஜபக்ஷ ஆகியோரினால் சுகாதார அமைச்சில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதற்கமைய, இம்மாதம் ஜப்பானின் டோக்கியோவில் இடம்பெறும் ஒலிம்பிக் தொடரிற்கு செல்லவுள்ள இலங்கை ஜிம்னாஸ்டிக் சங்கத்தின் செயலாளர் கபில ஜீவந்தவுக்கு முதலாவது கொவிட் தடுப்பூசி டிஜிட்டல் அட்டை வழங்கப்பட்டது.


குறித்த டிஜிட்டல் அட்டையில், தடுப்பூசி பெற்ற நபரின் பெயர், வயது, அடையாள அட்டை இலக்கம், தடுப்பூசி வழங்கப்பட்ட திகதி, பெறப்பட்ட தடுப்பூசி வகை, தொகுதி எண் ஆகிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் இரு கொவிட்-19 தடுப்பூசி டோஸ்களையும் பெற்ற அனைத்து இலங்கையர்களுக்கும், கொவிட் தடுப்பூசி டிஜிட்டல் அட்டைக்கான விண்ணப்பப்படிவம், எதிர்காலத்தில் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் இணைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்களின் அவசியத்தின் அடிப்படையில் குறித்த இலத்திரனியல் அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியுமெனவும், 011 796 63 66 எனும் தொலைபேசி இலக்கத்தை அழைத்து அதனை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பிரச்சினைகள் சில இருந்தாலும் அரசில் இருந்து விலகமாட்டோம்

## மகிந்த அமரவீர



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவுடன் சில பிரச்சினைகள் இருக்கும் பின்னணியில் கூட அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சியை வலுப்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வகையிலும் தயாரில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கீழ் மட்டத்தில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகளுக்கு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் பிரச்சினை இருக்கின்றது. இல்லை என்று சொல்ல முடியாது. பிரதேசமட்டத்தில் எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அணிகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சியினர் என்ற மதிப்பு வழங்கப்படுவதில்லை.

இது சம்பந்தமாக சில பிரச்சினைகள் உள்ளன. பல்வேறு நபர்கள் பலவற்றை கூறினாலும் கட்சியின் தலைவர்கள் எதனையும் கூறவில்லை.

ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைத்து தலைவர்களுடன் சகல பிரச்சினைகள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண எதிர்பார்த்துள்ளோம் எனவும் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக 800 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார இயலுமையை வலுப்படுத்திக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக 800 மில்லியன் அமெரிக்க டொலர் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் கிடைக்கப் பெறவுள்ளதாக நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பூகோள மட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக தாக்கத்தை கருத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியம் தனது உறுப்பு நாடுகளுக்கு 650 பில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடை அடிப்படையில் வழங்க தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் இலங்கைக்கும் அந்நிவாரண நிதி கிடைக்கப்பெறவுள்ளது.

உலக பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள வேளையில் சர்வதே நாணய நிதியம் தனது உறுப்பு நாடுகளுக்கு இவ்வாறு நிவாரண அடிப்படையில் நிதி வழங்குவது வழமையானது. இதனடிப்படையில் 510 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஏற்கனவே கிடைக்கப் பெற்றுள்ளது. இந்நிதியை நாட்டின் பொருளாதார இயலுமையை மேம்படுத்துவதற்காகவும், தற்போதைய நெருக்கடி நிலையை வெற்றிக் கொள்வதற்காகவும் பயன்படுத்திக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +1,488...

ரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 275, 458 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## 31 பேர் மரணம்...

பெண்கள் 15 பேர், ஆண்கள் 16 பேர் என இவ்வாறு 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த 31 கோவிட்-19 மரணங்களும் நேற்று முன்தினம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 3,533 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சாவகச்சேரியில்...

கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன ஒன்றோடு ஒன்று மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## கணவனின்...

மணியளவில் சம்பந்தர் கடைவீதி கரவெட்டிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காந்தரூபன் பிரேமதா (வயது - 38) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

கணவனும் மனைவியும் ஏற்கனவே பிரிந்திருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் மனைவி வந்து கொண்டிருந்த போது அவரை பின்தொடர்ந்து பிறிதொரு மோட்டார் சைக்கிளில் கணவன் துரத்தி வந்தார்.

கணவனின் பிடியில் இருந்து தப்பிக்க மோட்டார் சைக்கிளை போட்டுவிட்டு ஓடிய மனைவியை துரத்தித் துரத்தி கத்தியினால் சரமாரியாக வெட்டியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## யாழ்.பொலி...

வான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், மீண்டும் அங்கு தொற்று தலைதூக்கியுள்ளது.

நேற்று முன்தினம் இரு பொலிஸாரும் இரு நாட்களுக்கு முன் 5 பொலிஸாரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் இதுவரை 60 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஆரம்ப சுகாதார...

சுகாதார சேவைகள், தொற்று நோய்கள், மற்றும் கோவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அலகா சிங்கிடம் தெரிவித்தர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான புதிய வதிவிட பிரதிநிதி அலகா சிங்கிற்கும், இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளேயிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று சுகாதார அமைச்சில் இடம் பெற்றது.

நாட்டின் தற்போதைய சுகாதார நிலைமைகள் மற்றும் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தல் தொடர்பில் இப்பேச்சுவார்த்தையின்போது கலந்துரையாடப்பட்டது.

ஆரம்ப சுகாதார சேவைகளின் முக்கியத்துவம், ஆரம்ப சுகாதார சேவையின் உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வது குறித்தும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி தெளிவுபடுத்தினார்.

ஆரம்ப சுகாதார சேவையினை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி அதிக கவனம் செலுத்தியுள்ளார்.

வகுக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களை செயற்படுத்த உலக சுகாதார ஸ்தாபனமும் உலக வங்கியும் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ம-3)

## பஸ், ரயில்...

கண்டியில் நேற்றைய தினம் தடுப்பூசி செலுத்தும் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேருந்துகள் மற்றும் தொடருந்துகளின் சேவைகளைப் பெறவிரும்பும் அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்கள் தங்கள் கடமை அடையாள அட்டை அல்லது கடமை உறுதிப்படுத்தல் கடிதத்தை வைத்திருப்பது கட்டாயமாகும்.

அதே நேரத்தில், அத்தியாவசிய தனிப்பட்ட விடயங்களுக்காக பல்வேறு நிறுவனங்களுக்குச் செல்ல விரும்புவோர் இந்த மாகாணங்களுக்கு இடையேயான பேருந்துகள் மற்றும் தொடருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலமும் தங்கள் தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

அவர்களும் தங்கள் தேவையை உறுதிப்படுத்தும் ஆவணத்தை தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும் என்றார். (ம-3)

## சுகாதார பிரிவே...

லின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இதன் காரணமாக, சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் பொலிஸ் அதிகாரிகளின் தவறு இல்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடுவலையில் புதிய பொலிஸ் நிலைய திறப்பு விழாவில் கலந்துகொண்டு அமைச்சர் சரத் வீரசேகர இதனை தெரிவித்தார்.

“பொலிஸ் ஒருபோதும் அவர்கள் விரும்பியபடி சட்டத்தை மீறி தன்னிச்சையாக செயல்படவில்லை. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவின் பேரில் பொலிஸ் செயற்பட்டது.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் கீழ், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உத்தரவுகளை பிறப்பிக்க முடியும். நோய் பரவல் காரணமாக அனைத்து போராட்டங்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார் என்றார். (ம-3)

## வடக்கில் 26...

கொள்ளப்பட்ட பரிசோதனையில், யாழ். குடாநாட்டில் மேலும் 19 பேருடன் டக்கில் மேலும் 26 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**யாழ். மாவட்டத்தில் – 19 பேர்**

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 08 பேர் (22, 26, 27, 29, 30, 49, 67 வயதுடைய ஆண்கள் ஏழு பேர், 48 வயதுடைய பெண்)

யாழ். போதனா வைத்தியசாலையில் - 04 (35, 56, 57, 67 வயதுடைய ஆண்கள்) சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 03 பேர் (20, 46 வயது ஆண்கள், 58 வயது பெண்)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் - 02 பேர் (43 வயது ஆண், 65 வயது பெண்)

நொதேர்ன் தனியார் வைத்தியசாலையில் - ஒருவர் (34 வயதுடைய ஆண்)

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - ஒருவர் (48 வயது ஆண்)

**மன்னார் மாவட்டத்தில் 02 பேர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் - 02 பேர் (58, 75 வயதுடைய ஆண்கள்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 02 பேர்**

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் - 02 பேர் (31 வயது ஆண், 80 வயது பெண்)

இவ்வாறு வட மாகாணத்தில் ஆண்கள் 15 பேர் மற்றும் பெண்கள் 04 பேர் என 23 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் வசாவிளான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் - 03 பேருக்கு (34, 36, 38 வயது பெண்கள்) தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)



அண்மையில் ஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்த போது...

## இலங்கையில்...

சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டு வரும் நாளாந்த அறிக்கைகளின் அடிப்படையில் இவ்விடயம் தொகுக்கப்பட்டுள்ளது.

ஜூலை 01 தொடக்கம் 10ஆம் திகதி வரையான பத்து நாட்களில் இவ்வாறு 382 கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு கடந்த 10 நாட்களில் 382 கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில் இதுவரையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 3,502 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மெகா பவர்
திகதி 12/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0851
C 13 30 65 67 68

மஹஜன சம்பத
திகதி 2021/07/12
சீட்டிழுப்பு இலக்கம் 4503
D 4 3 9 5 4 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 12.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2798
Z 32 49 65 72

தன நிதானய
திகதி -2021.07.12
சீட்டிழுப்பு இலக்கம் - 533
I 08 61 62 66

அத கோடிபதி
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 135,498,229
சீட்டிழுப்பு இல. 1306
03 17 30 58 E

சனிதா
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,850,533
சீட்டிழுப்பு இல. 3641
10 23 40 65 Z

சுப்பர் ஜக்பொட் 4,116,496/=
வெற்றி இலக்கங்கள் 01 02 05 59 மிதுனம்
திகதி : 12.07.2021
வெற்றி வாரம் : 3192
வர்ணம் : மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,156,620/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1480 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 12/07/2021 தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் D 02 12 62 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் 58,185,683/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 01 - 1935

மறைவு 09 - 07 - 2021

## திரு. இராமு நடேசன்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர், சமாதான நீதவான்)

சாவகச்சேரி கிராம்புவில்லை பிறப்பிடமாகவும் மீசாலை, புத்தளம், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமு நடேசன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர், சமாதான நீதவான்) கடந்த 09.07.2021 (வெள்ளிக்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற பொன்னையா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூமணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வல்லிப்புரம், செல்லம்மா, கதிரவேலு, ஆறுமுகம், சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுபத்திரா (Teacher-Al Ameen Vidyalaya, Colombo - 03), பிரபா (Lawyer - London), பூமா (Retired Teacher - London), சியாமா (Switzerland) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கு.ஸ்ரீராகவராஜன் (Retired Teacher -C/Hindu College, Colombo - 04), க.நாகேஸ்வரன் (Lawyer - London), பா.ராகவன் (Engineer -London), இ. கணேஷலிங்கம் (Technical Officer- Switzerland) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீகுணேஷன், ஸ்ரீசுபத்ஷன், பிரதாயினி, திருமதி. வருணி தனுஷன், ஆரணி, ஹரிஷ், திருமதி. சாயிரேகா விஸ்வநாத், திருமதி.ரக்ஷாயினி மாகதன், நடாஷாயி, மதுஷன், விஷ்ணுகானா, சங்கீர்னா ஆகியோரின் அன்புப் பேரனும் கிரியாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.07.2021) புதன்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியை களுக்காக எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(7197)

35B, விவேகானந்த வீதி, கொழும்பு - 06

சுபத்திரா (மகள்) : 077 391 6629
011 236 0724

தகவல்:- குடும்பத்தினர்

**Idea(I) PHYSICS**
Home visit வீடு வரல்
English / Tamil medium
Radiation கதிரியக்கம்
Electronics இலத்திரனியல்
இளந்திரையன் ISA
074 099 9980
(7196)

நவீன இயந்திரத்தின் மூலம் மிகக் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும்.
மதுசாலினி அரைக்கும் ஆலை
பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அருகாமை, இணுவில்.
070 494 3990
(7154)

**IELTS** DMI COMPUTER EDUCATION 0777 17 35 17
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material (Book 15)
0777 24 07 07
Academic or General
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும் (C-2335)
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 15/7/2021 ZOOM Online
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deutsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 021 222 4403
நெல்லியடி 021 226 2470 0777577333
சாவகச்சேரி 021 227 0775 0777227074
சுன்னாகம் 021 224 1970 0776032300
சண்டிலிப்பாய் 021 225 6665 0761354503
கிளிநொச்சி 021 228 5655 0776398096

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் றக்கா வீதியில் 3 பரப்பும் 4 அறைகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை.)
பார்வையிடும் நேரம் 9.00 am - 1.00 pm
071 822 9630
076 231 3139
(7195)

**காணி விற்பனை**
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட (யாழ். நகரில் இருந்து 1 1/2 Km தூரம்) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும்
076 221 2037, 076 734 1023
077 064 2661
(7191)

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2308)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
0768226240 DHL
(C-2307)

# மரண அறிவித்தல்



திரு.

## பொன்னம்பலம் தயானந்தன்

(அதிபர் - யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை)

**தோற்றம் : 14.07.1968 மறைவு : 12.07.2021**

கேணிக்கரை சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தயானந்தன் நேற்று (12.07.2021) திங்கட்கிழமை புவனேஸ்வரித்தாய் பாதம் சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பூமகள் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் ஐஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஆனந்தரூபியின் (நீர்ப்பாசனத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் கதிர்சிகன் (தரம் - 10, மானிப்பாய் இந்துக் கல்லூரி), கரிணிகா (தரம் - 8, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வத்சலாதேவி, வத்சலானந்தன், வத்சலாவதி, தயாபாலினி, சிவசக்தி, சத்தியானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவரூபி, விஜயரூபி, சாந்தரூபி, பகீரதன், ஸ்ரீதரன், ஞானரூபி, கம்சத்வனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.07.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(7204)

"கேணியடி"
கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.

021 205 2100

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.